
விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 324 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 22 புதன்கிழமை (08.11.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/=



# ரணில் அரசுக்குள் வெடித்தது மோதல்

## ஜனாதிபதியின் உத்தரவுக்கு பணிய மறுத்த அமைச்சர்




(கொழும்பு)

ரணில் அரசாங்கத்துக்குள் புதிய மோதல் நிலை உருவாகியுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஜனாதிபதியின் உத்தரவுக்கு பணிய விளையாட்டுத்துறை அமைச்சர் மறுத்ததால் இந்நிலை உருவாகியுள்ளது.

(15ஆம் பக்கம் பார்க்க)



## ஒட்டுசுட்டானில் வீதி விபத்து குடும்பஸ்தர் உயிரிழப்பு

6ஆம் பக்கம் பார்க்க

## தபால் சேவைகள் முடங்கலாம்

(கொழும்பு)

ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கம் வேலை நிறுத்தப் போராட்டத்தை ஆரம்பிக்கவுள்ளதாக தெரிவித்துள்ளது.

நுவரெலியா தபால் நிலையம் அமைந்துள்ள கட்டிடங்களை விற்பனை செய்யும் தீர்மானத்திற்கு எதிராகவே இந்த வேலைநிறுத்தம் முன்னெடுக்கப்படவுள்ளது.

அதன்படி நள் 15

## கஜேந்திரன் - டக்ளஸ் சபையில் வாக்குவாதம்

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா ஆகியோருக்கிடையில் நேற்றைய பாராளுமன்ற அமர்வின்போது வாக்குவாதம் ஏற்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக, கடற்தொழில் அமைச்சு இதுவரை எந்தவொரு அபிவிருத்தி நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை என கஜேந்திரன் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், வடக்கு கிழக்கில் உள்ள கடற்தொழிலாளர்களோடு உரிய 15

## தனியார் துறையை பலப்படுத்தி பொருளாதாரம் முன்னேற்றப்படும்

### ரணிலின் எதிர்பார்ப்பு அதுவே - வஜிர அபேவர்த்தன



(கொழும்பு)

தனியார் துறையை பலப்படுத்தி பொருளாதாரத்தை முன்னேற்றுவதே ஜனாதிபதி ரணிலின் எதிர்பார்ப்பு என பாராளுன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று 02

### தேர்தல் முறை திருத்தம்

## பாராளுமன்றில் ஜனாதிபதி இன்று விசேட அறிவிப்பு

(கொழும்பு)

தேர்தல் முறைத் திருத்தம் தொடர்பில் பாராளுமன்றில் ஜனாதிபதி ரணில் இன்று விசேட அறிவிப்பை வெளியிடவுள்ளார்.

தேர்தல் முறை திருத்தம் உள்ளிட்ட பல விடயங்களை அடிப்படையாக கொண்டு விசாரணை ஆணைக்குழுவின் பரிந்துரைகள் அமையும் பட்சத்தில் எதிர்வரும் முதலாவது தேசிய தேர்தலை புதிய முறைமையின் கீழ் தேர்தலை நடத்த முடியுமா? என்பதை கண்டறியுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உரிய திணைக் 15

## சீனத் தூதுக் குழுவினர் மன்னாருக்கு விஜயம்

### மீனவ குடும்பங்களுக்கு உணவுப் பொதி வழங்கி வைப்பு




15

### அரச ஊழியர்களுக்கு

## சம்பள உயர்வு நிச்சயம்

(கொழும்பு)

அரச ஊழியர்களுக்கு சம்பள 15

## காரைநகர் கடற்பரப்பில் 137 கிலோ கஞ்சா மீட்பு

### 3 சந்தேகநபர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ். காரைநகர் கடற்பரப்பில் கடற்படையினர் மேற்கொண்ட தேடுதலின்போது நேற்று அதிகாலை 137 கிலோகிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது

காரைநகர் கடற்பரப்பில் சந்தேகத்துக்கிடமான படகு ஒன்றைக் கடற்படையினர் சோதனை செய்தபோது படகின் உள்ளே ஒரு மூடைக் கஞ்சாவும் கடலில் வீசப்பட்ட நிலையில் 15

## ஆளும் கட்சி எம்.பிக்களுடன் ஜனாதிபதி அவசர சந்திப்பு

### பட்ஜெட் தொடர்பில் பேசப்பட்டதாக தகவல்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, ஆளுங்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் அவசர சந்திப்பொன்றை நடத்தியுள்ளார்.

2024ஆம் ஆண்டுக்கான பட்ஜெட் தொடர்பில் இதில் கவனம் செலுத்தப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது.

குறித்த சந்திப்பானது நேற்று மாலை 5 மணியளவில் ஜனாதிபதி செயலகத்தில் நடைபெற்றது.

எதிர்வரும் 13ஆம் திகதி திங்கட்கிழமை 15

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சுகாதாரமற்ற முறையில் உணவு தயாரிப்பு பூநகரியில் 3 உணவகங்களுக்கு சீல்

(பூநகரி)

பூநகரியில் எலிஎச்சம் மற்றும் ஈக்களினால் மாசுபடும் வகையில் உணவு தயாரிப்பில் ஈடுபட்ட மூன்று உணவகங்களுக்கு நீதிமன்ற உத்தரவின் அடிப்படையில் பூநகரி சுகாதாரப் பிரிவினரால் நேற்று சீல் வைத்து மூடப்பட்டது.

அண்மையில் பூநகரி மேற் பார்வை பொது சுகாதார பரிசோ தகர் ஆ.ஜென்சன் றொனால்ட் தலைமையில் பூநகரிப் பகுதி உணவகங்கள் பொதுசுகாதார பரிசோதகர்களால் குழுவாக பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டபோது,

ஒரு உணவகத்தில் எலி எச்சத்துடன் சேர்த்து றோல் தயாரிக்கப்படுவதும், மற்றைய இரு உணவகங்களில் அதிகளவான ஈக்கள் மொய்த்தபடி உணவுப்பண்டங்கள் காணப்பட்டதோடு ஊழியர்கள் மருத்துவ தகுதிச் சான்றிதழ் இன்றியும், தனிநபர் பாதுகாப்பு அங்கிகள் இன்றியும், முகச்சவரம் செய்யாமலும் உண வுகையாளுவது கண்டுபிடிக்கப் பட்டதோடு அடிப்படைக் கழிவுக் கட்டுப்பாடுகளும் மோசமாகக் காணப்பட்டன.

இதுதொடர்பாக பூநகரிப் பொது சுகாதார பரிசோதகர் சிந்துஜனால் எட்டு வழக்குகள் செவ்வாய்கிழ மையன்று கிளிநொச்சி நீதிமன் றில் தாக்கல்செய்யப்பட்டது. இதில் இனங்காணப்பட்ட குற்றங்களுக் காக 95,000(தொண்நூற்று ஐந் தாயிரம்) தண்டப்பணம் விதிக்கப்பட் டதோடு மூன்று உணவகங்களும் நீதிமன்ற உத்தரவுப் படி பொது சுகா தார பரிசோதகர்களால் சீல்வைத்து மூடப்பட்டது. (ம-7,30)

# 672 கோடி மதுவரி செலுத்தாத ஐந்து மதுபான நிறுவனங்கள்

## ரஞ்சித் சியாம்பலாபிட்டிய குற்றச்சாட்டு

ஐந்து மதுபான நிறுவனங்கள் 672 கோடி ரூபாவுக்கும் அதிகமான வரித் தொகையை செலுத்தாதுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

குறித்த விடயத்தை நேற்று பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சித் தலைவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும்போதே கூறியு ள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐந்து மதுபான நிறுவனங்களும் வரி செலுத்த தாமதமாகும் ஒவ்வொரு மாதத்திற்கும் 3 சதவீத வரி மேலதிகமாக விதிக்கப்பட்டுள்ளதால் தாமதக் கட்டணமாக 400 கோடி ரூபா வசூலிக்கப்படவுள்ளது.

வரி செலுத்தாமைக்காக அந்நிறுவனங்கள் மூடப்படுமானால் அரசுக்கு செலுத்தவேண்டிய வரித்தொகையை வசூலிக்க முடியாது. எனவே அந்நிறுவனங்களுக்கு எதிர்வரும் டிசம்பர் 29ஆம் திகதிவரை வரியை செலுத்த கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பின்னர் அந் நிறுவனங்களுக்கான அனுமதிப்பத்திர காலம் நீடிக்கப்படமாட்டாது.

சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் இம்முறையே மதுவரி மோசடியை தடுப்பதற்கு அதிக காலம் எடுத்துள்ளது. மதுபான போத்தல்களுக்கான ஸ்டிக்கர்களை அறி முகப்படுத்துவது ஒரு புரட்சிகரமான விட யமாகும் எனினும் அதில் சில சிக்கல்கள் உள்ளன.

சரியான முறையில் ஸ்டிக்கர்கள் அறிமுகப்படுத்தப்பட்டால் அரச வருமானத்தை அதிகரித்துக் கொள்ள முடியும் என தெரிவித்துள்ளார். (ம-7)

## தனியார்...

நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும் அவர் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியினால் முன்னெடுக்கப்படும் இந்த வேலைத்திட்டத்தின் வெற்றியின் ஊடாக எதிர்காலத்தில் மின்சாரம், எரிவாயு மற்றும் எரிபொருளின் விலைகளை குறைத்து, மக்களுக்கு சிறந்த பொருளாதாரத்தை உருவாக்க முடியும்.

இந்த வேலைத்திட்டத்தை சீர்குலைக்கும் செயற்பாடுகளுக்கு ஆதரவளிக்க வேண்டாம் என்று மக்களைக் கேட்டுக் கொள்கின்றேன் பதினாறு இலட்சம் பேருக்கும் அதிகமாக உள்ள அரச பொறிமுறையை வரவு செலவுத் திட்டத்துடன் பொருத்துவதில், வங்குரோத்தான நாட்டின் எதிர்கால இலக்குகளை எவ்வாறு அடைவது என்பதில் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

குறிப்பாக 2019 ஆம் ஆண்டில் நமது ஆட்சி மாற்றப்பட்ட பிறகு பொருளாதார நெருக்கடி உருவாகியது. அக்காலத்தில் வரிக் கொள்கை மாற்றப்பட்டது.

குறிப்பாக தனிநபர் வருமான வரி குறைக்கப்பட்டது. அதேபோன்று, தொடர்ந்தும் அதிகளவில் காணப்பட்ட வரித் தொகைகளை நீக்கி, வரிச் சலுகைகள் வழங்கப்பட்டன.

இந்த வரிச் சலுகைகள் காரணமாக இந்த நாடு வேகமாக வீழ்ச்சியடையத் தொடங்கியது. இறுதியாக 2022 ஆம் ஆண்டாகும்போது மத்திய வங்கி பணத்தை அச்சிட்டு சம்பளம் வழங்கும் நிலை தோன்றியது.

அந்த நிலையுடன், நாம் ஒரு விடயத்தை நினைவில் கொள்ள வேண்டும். எப்போதும் ஒரு அரசாங்கம் வீழ்ச்சி அடைவது அந்நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் போதுதான். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு வீழ்ச்சி அடைந்த நாட்டைப் பொறுப்பேற்று அதனை மீட்டெடுத்துள்ளார்.

உதாரணமாக 2015 ஆம் ஆண்டு பத்தாயிரம் ரூபாவால் அரச ஊழியர்களின் சம்பளம் அதிகரிக்கப்பட்டாலும் கூட அது அரச ஊழியர்களின் சம்பள சுற்றறிக்கையின் பிரகாரம், இலங்கை வரலாற்றில் முதன் முறையாக அவர்களின் வருமானத்தில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தினார்.

நாடு வங்குரோத்து அடைந்த போது எரிவாயு லொறிகள் மற்றும் எரிபொருள் பௌஸர்களைக் கண்டவுடன் மக்கள் கைதட்டி ஆரவாரம் அளிக்கும் நிலை தோன்றியது.

அரச அலுவலகங்களில் மின்சாரம் இன்றி அரச பொறிமுறை ஸ்தம்பித்தது. இப்போது அனைத்தும் கிடைக்கின்றன. ஆனால் விலை அதிகரித்துள்ளது. அதன் விலைகளைக் குறைக்க வேண்டியுள்ளது.

எந்தவித சந்தேகமும் கொள்ள வேண்டாம். நான் அறிந்த இந் நாட்டின் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, இறுதியில் எரிவாயு விலையையும் குறைப்பார். மின்சார விலையையும் குறைப்பார். தற்போதுள்ள பிரச்சினைகளையும் தீர்த்து வைப்பார். சம்பளத்தையும் அதிகரிப்பார் என தெரிவித்துள்ளார். (ம-7)


RAVEENS EMC
KARAVEDDY
WANTED
● Administrator (As director)
● Science Graduate(Bio) (Male or Female)
Contact No:
021 226 3321
076 416 9845
P.Easwaranarthan (Director)
(C-7581)



கல்யாணமாலை
(இலவச திருமண சேவை)
பதவி வெற்றிடம்
முகாமைத்துவ உதவியாளர் (பெண்கள்)
● வயதெல்லை – 40 இற்கு மேல்.
● அரச சேவையிலிருந்து ஒய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.
● யாழ். நகரத்திற்கு அண்மையாக இருப்பவர்களுக்கு முன்னுரிமை
தொடர்புகளுக்கு
076 097 3121



ஜெயக்குமார் திருமண சேவை
மல்லாகம்
◆ ஐரோப்பாவில் வசிக்கும் சூரியன், செவ்வாய் உடைய மணமகனுக்கு 1993 இற்கும் 1998 இற்கும் இடையில் பிறந்த படித்த மணமகள் தேவை.
◆ ஐரோப்பாவில் வசிக்கும் மணமகளுக்கு 1995 இற்கும் 2000 இற்கும் இடையில் பிறந்த மணமகன் தேவை.
உங்கள் தகுதிக்கேற்ப உள்ளூர், வெளிநாடுகளில் மணமகன், மணமகள் பொருத்தித்தரப்படும்.
021 491 9370, 077 900 7091
074 026 6554
0094764752219
(17693)


## காணவில்லை




465/A சிவலிங்கபுளியடி K.K.S Road Jaffna எனும் முகவரியை வதிவிடமாகக் கொண்ட திருமதி **இந்திரலிங்கம் பத்மாவதி** (வயது-70) எனும் மனநிலை பாதிகப்பட்ட மூதாட்டியை நேற்று 07.11.2023 முதல் காணவில்லை அவர் காணாமல்பேகும் போது மஞ்சள் நிற ஆடை அணிந்திருந்தார்.

அவரினை அடையாளம் கண்டவர்கள் தயவுகூர்ந்து கீழ்வரும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

077 086 4155
077 959 7347


வாழ்க வளமுடன்
எமது பாடசாலையின்
விஞ்ஞான பாட ஆசிரியர்
திரு.நடராசா துஷ்யந்தன்
அதிபராக பதவியுயர்வு பெற்றமையை பாராட்டி வாழ்த்துகின்றோம்.
விஞ்ஞானத்தின் வித்தாய் வந்து
தலைமைத்துவத்தின் இலக்கணமாய்
இளவயதில் அதிபராய்
பதவி உயர்வு பெற்ற நீங்கள்
இன்பமுடன் வாழ வாழ்த்துகின்றோம்.
Best Wishes!
ஆசிரியர் நலன்புரிக் கழகம்
யா/உடுவில் சந்திரோதய வித்தியாசாலை
(17802)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பார்வைக் குறைபாட்டால் பாதிக்கப்படுவோர் யாழில் அதிகரிப்பு

## வைத்திய நிபுணர் மலரவன்

**(யாழ்ப்பாணம்)**

**யாழில் பார்வைக் குறைபாட்டினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்து வருவதாக கண் சிகிச்சை வைத்திய நிபுணர் மு.மலரவன் தெரிவித்துள்ளார்.**



யாழில் இடம்பெற்ற ஊடக வியலாளர்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் கண்ணில் பார்வைக் குறைவு ஏற்படுவதற்கு வெண்புரை, கண்ணாடி அணிதல், நீரிழிவுநோய், வயது காரணமாக வருகின்ற விழித்திரு நோய் ஆகியன முக்கிய காரணங்களாக உள்ளன.

இத்தாக்கங்களிலிருந்து விடுபட வேண்டும் என்றால் வாழ்க்கை நடைமுறைகளில் எங்களால் இயலுமானவற்றை நாங்கள் பின்பற்றுதல் வேண்டும்.

முக்கியமாக எங்களுடைய உணவுப் பழக்கவழக்கங்களில் நாங்கள் கூடுதலான பழ, மரக் கறி வகைகள் நாங்கள் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

நாளாந்தம் சூரியஒளியின் அளவு கண்ணில் படு வதை குறைத்துக் கொள்ள வேண்டும். அத்துடன் மாணவர்கள் மற்றும் அனைவரும் நவீன தொலைத்தொடர் சாதனங்களின் (டிவைஸ்) நேரத்தை குறைக்க வேண்டும்.

இந்த நடைமுறைகளையும் நீங்கள் பின்பற்றினால் இனி வரும் காலங்களில் பிரச்சினைகளை குறைத்துக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.

அத்துடன் மிக முக்கியமானது, இரத்தஉறவு திருமணத்தை இயலுமானவரை குறைத்துக் கொள்ள வேண்டும்.

இதைத் தவிர தற்போதைய நிலையில் காலநிலை மாற்றங்களும் இக்கண் நோய்கள் அதிகரிக்கக் காரணமாகவுள் ளன.

இவ் ஐந்து விடயங்களில் இருந்தும் அவதானமாக இருந்தால் கண்நோயின் தாக்கத்தினைக் குறைக்க முடியும் இவ்வாறு வைத்தியர் தெரிவித்துள்ளார். (நி-5-6-33)

## சாதாரண தர பரீட்சைப் பெறுபேறுகள் இம்மாத நடுப்பகுதியில்

(கொழும்பு)

சாதாரண தரப் பரீட்சைப் பெறுபேறுகள் இம் மாதம் மூன்றாவது வாரத்தில் வெளியிடப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும் போதே சுசில் பிரேமஜயந்த இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

2024 ஆம் ஆண்டுக்கான பாடப்புத்தகங்கள் அச்சிடும் பணிகள் நடந்து வருகின்றன. சில பாடப் புத்தகங்கள் அச்சிடும் பணி 60 சதவீதம் நிறைவு செய்யப்பட்டுள்ளது எனவும் அவர் தெரிவித்தார். (நி-5-6)

## வங்கக்கடலில் நிலநடுக்கம்

(கொழும்பு)

வங்கக்கடல் பகுதியில் நேற்று அதிகாலை 5.32 மணியளவில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இது ரிக்டர் அளவுகோலில் 4.2 ஆக பதிவாகியுள்ளதாக தேசிய நிலநடுக்க அறிவியல் மையம் அறிவித்துள்ளது.

அந்தமான் மற்றும் நிகோபார் தீவுகளை அண்மித்த பகுதிகளில் இந்த நிலநடுக்கம் உணரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் ஏற்பட்ட பாதிப்புகள் குறித்து தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை. இதேவேளை நேபாளத்தில் கடந்த 3 ஆம் திகதி இடம்பெற்ற நிலநடுக்கத்தால் 150 இற்கு மேற்பட்டோர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

# ஹோட்டலில் உட்கார்ந்து கொண்டு மோடிக்கு கடிதம் எழுதுவதால் பிரச்சினை தீராது

## முன்னாள் முதலமைச்சர் வரதராஜ பெருமாள்

(கொழும்பு)

தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண தமிழ்க் கட்சிகளின் தலைவர்கள் இந்தியாவுடனான தங்கள் ஈடுபாட்டை வலுப்படுத்த வேண்டும் என வடக்கு -கிழக்கு மாகாணத்தின் முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் தெரிவித்துள்ளார்.

கோயம்புத்தூரில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவில் பங்கேற்று உரையாற்றிய அவர், இந்த விடயத்தில் தமிழ் கட்சிகள் மற்றும் அவற்றின் தலைவர்களிடம் இருந்து அழுத்தம் கொடுக்கப்பட வேண்டும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

1983-87 காலப்பகுதியில் தமிழ் கட்சிகளும் அதன் தலைவர்களும் புதுடில்லி மற்றும் தமிழ்நாட்டிலுள்ள இந்தியத் தலைவர்களுடன் அடிக்கடி தொடர்பில் இருந்ததை போன்று இப்போது அவ்வாறான உறவு இல்லை என சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் யாழ்ப்பாணத்தில் உள்ள ஒரு ஹோட்டலில் உட்கார்ந்து கொண்டு இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு கடிதம் எழுதுவது மட்டும் பலன் தராது.

அதிகாரப் பகிர்வு மற்றும் அரசியல் தீர்விற்காக இந்தியாவிற்குள் குரல் இருக்க வேண்டும் என்றும் புதுடில்லி மற்றும் தமிழ்நாட்டுத் தலைவர்களுடன் தமிழ்த் தலைவர்கள் நெருங்கிய உறவைப் பேணினால் மட்டுமே இது சாத்தியமாகும் என்றும் வரதராஜப் பெருமாள் தெரிவித்துள்ளார். (நி-5-6)



# ஜனாதிபதி ரணில் மீதான நம்பிக்கை வீழ்ச்சி

## கருத்துக்கணிப்பில் தகவல்



(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்தின் மீது இலங்கையில் 10 வீதத்திற்கும் குறைவானவர்களே நம்பிக்கை வைத்துள்ளதாக வெரிட்டே ரிசர்ச் அமைப்பு தெரிவித்துள்ளது.

தேசத்தின் மனநிலை எனும் தொனிப்பொருளில் குறித்த அமைப்பு வெளியிட்டுள்ள ஆய்வு அறிக்கையிலேயே இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளது.

குறித்த ஆய்வு அறிக்கையின்படி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் அங்கீகாரம் ஜூன் மாதத்தில் 21 வீதமாக இருந்த நிலையில் அது நவம்பர் மாதத்தில் 9 வீதமாக குறைவடைந்துள்ளமை தெரியவந்துள்ளது.

அதேபோன்று கடந்த நான்கு மாதங்களில் அரசின் மீது மக்கள் கொண்டுள்ள திருப்தி என்ற காரணியும் நான்கு மாதங்களில் 12 வீதத்தில் இருந்து 6 வீதமாக குறைவடைந்துள்ளதாக குறித்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேபோல், பொருளாதார நம்பிக்கைக்கான சுட்டெண்ணும் 62இல் இருந்து 44 வீதமாக சரிந்துள்ளது. இந்த கருத்துக்கணிப்பில் அனைத்து அம்சங்களிலும் அரசாங்கத்தின் மீதான நம்பிக்கையில் பாரிய வீழ்ச்சியும் பின்னடைவும் ஏற்பட்டுள்ளது என்பதை குறித்த அறிக்கையின் தரவுகள் வெளிப்படுத்துகின்றன.

இந்த 'தேசத்தின் மனநிலை' கருத்துக்கணிப்பானது ஆண்டிற்கு மும்முறை நடத்தப்படுகிறது. இதற்கமைவாக குறித்த ஆய்விற்காக நாடு முழுவதிலுமுள்ள மக்களிடம் கருத்துகள் கோரப்பட்டு அவை தொகுக்கப்பட்டு அறிக்கையிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது (நி-5-6)

# பொதுச்சுகாதார பரிசோதகர்கள் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கை

(கொழும்பு)

பொதுச்சுகாதார பரிசோதகர்களின் பிரச்சினைகளுக்கு சாதகமான தீர்வுகள் கிடைக்காத நிலையில் மீண்டும் தொழிற்சங்க நடவடிக்கையினை முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, இன்று முதல் பொதுச்சுகாதார பரிசோதகர்களினால் வழங்கப்படும் அனைத்து அறிக்கைகளும் இடைநிறுத்தப்படும் எனவும் மேம்பாட்டு மதிப்பாய்வு உட்பட அனைத்து கூட்டங்களிலும் பங்கேற்பது இடைநிறுத்தப்படும் எனவும் பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அதேநேரம், எதிர்வரும் 22 ஆம் திகதி முதல் அனைத்து தொற்றுநோய் கட்டுப்பாட்டு நடவடிக்கைகளில் இருந்தும் விலகி செயற்படவுள்ளதாக அச்சங்கம் அறிவித்துள்ளது.

மேலும், எதிர்வரும் டிசெம்பர் முதலாம் திகதி முதல் அனைத்து களப்பணிகளில் இருந்தும் விலகி செயற்படவுள்ளதாகவும், டிசெம்பர் மாதம் 15 ஆம் திகதி முதல் சுகாதார அமைச்சுக்கு முன்பாக ஆர்ப்பாட்டம் மற்றும் பேரணிகளை நடத்தவுள்ளதாகவும் இலங்கை பொதுச்சுகாதார பரிசோதகர்கள் சங்கம் அறிவித்துள்ளது. (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மக்ஸ்வெல் கோர தாண்டவம்

# தடுமாறிய ஆஸியை தனியாக மீட்டெடுத்தார்

## ஆப்கானின் போராட்டம் வீணானது





மக்ஸ்வெல்லின் அதிரடியான இரட்டை தசம் மூலம் ஆப்கானிஸ்தானை வென்றது அவுஸ்திரேலியா.

உலக கோப்பை தொடரின் 39வது லீக் ஆட்டம் மும்பை வான்கடே மைதானத்தில் நேற்று நடைபெற்றது.

இதில் அவுஸ்திரேலியா, ஆப்கானிஸ்தான் அணிகள் மோதின. டாஸ் வென்ற ஆப்கானிஸ்தான் முதலில் பட்டிங் தேர்வு செய்தது.

அதன்படி, முதலில் ஆடிய ஆப்கானிஸ்தான் அணி 5 விக்கெட்டுக்கு 291 ரன்களை எடுத்தது. சட்ரன் 129 ரன்னும், ரஷித் கான் 35 ரன்னும் எடுத்து ஆட்டமிழக்காமல் களத்தில் இருந்தனர்.

இதையடுத்து, 292 ரன்களை எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் அவுஸ்திரேலியா அணி களமிறங்கியது.

ஆரம்பத்தில் டிராவிஸ் ஹெட் டக் அவுட்டாகி அதிர்ச்சி அளித்தார். அடுத்து இறங்கிய மிட்செல் மார்ஷ் 24 ரன்னில் வெளியேறினார். டேவிட் வார்னர் 18 ரன்னில் ஆட்டமிழந்தார். ஜோஷ் இங்கிலிஸ் டக் அவுட்டானார். இதனால் அவுஸ்திரேலியா அணி 8.2 ஓவரில் 4 விக்கெட் இழப்புக்கு 49 ரன்களை எடுத்து திணறியது.

லபுசேன் 14 ரன்னிலும், ஸ்டோய்னிஸ் 6 ரன்னிலும், மிட்செல் ஸ்டார்க் 3 ரன்னில் அவுட்டாகினர். ஒரு கட்டத்தில் அவுஸ்திரேலியா 91 ரன்களுக்கு 7 விக்கெட்டை இழந்து திணறியது.

ஒருபுறம் விக்கெட்கள் வீழ்ந்தாலும் மக்ஸ்வெல் அபாரமாக ஆடி இரட்டை சதமடித்தார். அவருக்கு கப்டன் பாட் கம்மின்ஸ் ஒத்துழைப்பு கொடுத்தார்.

இறுதியில், அவுஸ்திரேலியா 7 விக்கெட்டுக்கு 293 ரன்கள் எடுத்து அபார வெற்றி பெற்றது: மக்ஸ்வெல் 201 ரன்னுடன் அவுட்டாகாமல் இருந்தார்.

ஆப்கானிஸ்தானின் நவீன் உல் ஹக், ஓமர்சாய், ரஷித் கான் ஆகியோர் தலா 2 விக்கெட் வீழ்த்தினர்.

போட்டியின் ஆட்ட நாயகனாக மக்ஸ்வெல் தெரிவானார். (ம-7)

# வங்களாதேஷ் அணியின் செயல் மிகவும் ஏமாற்றம் அளிக்கிறது

## மத்யூஸ் சாடல்

வங்களாதேஷ் அணியின் செயல் மிகவும் ஏமாற்றம் அளிக்கிறது என இலங்கை அணி வீரர் மத்யூஸ் தெரிவித்துள்ளார். உலகக் கோப்பை கிரிக்கெட்டில் நேற்று முன்தினம் டெல்லியில் நடந்த போட்டியில் இலங்கையை 3 விக்கெட் வித்தியாசத்தில் வங்காளதேசம் தோற்கடித்தது. இப்போட்டியில் இலங்கை வீரர் மத்யூஸ் "டைம் அவுட்" முறையில் அவுட் கொடுக்கப்பட்டு வெளியேற்றப்பட்டார்.

2023 ம் ஆண்டு உலகக் கோப்பை போட்டிக்கான விதிப்படி ஒரு வீரர் ஆட்டமிழந்தால் அடுத்து வரும் பட்ஸ்மேன் 2 நிமிடங்களுக்குள் பந்தை எதிர் கொள்ள வேண்டும். மத்யூஸ் உடனடியாக மைதானத்துக்கு வந்தாலும் பந்தை எதிர்கொள்வதில் தாமதம் ஏற்பட்டது. அவரது ஹெல்மெட்டில் பிரச்சினை இருந்ததால் மாற்று ஹெல்மெட் கொண்டு வரும்படி மற்ற இலங்கை வீரர்களிடம் கூறினார்.

இதில் தாமதம் ஏற்பட்டதால் வங்காளதேச கேப்டன் ஷாகிப்-அல்-ஹசன், நடுவர்களிடம் அதை சுட்டிகாட்டி டைம் அவுட் கேட்டார். இதையடுத்து மத்யூசுக்கு டைம் அவுட் கொடுக்கப்பட்டது. இதனால் அவர் அதிருப்தியுடன் வெளியேறினார்.

வங்காளதேஷ் அணி விளையாடிய விதம் மிகவும் ஏமாற்றம் அளிக்கிறது.


ஷாகிப் அல் ஹசன் மற்றும் வங்காளதேச அணியின் செயல் வெளிப்படையாக அவமானகரமானது. பீல்டிங்குக்கு இடையூறு அல்லது பந்து வீசுவதற்கு முன்பே கிரீசைவிட்டு நான் வெளியேறி இருந்து அவுட் கொடுத்திருந்தால் எந்த பிரச்சினையும் இல்லை. நான் இரண்டு நிமிடங்களில் களத்தில் இருந்தேன். நான் கிரீசில் இருந்தபோதுதான் எனது ஹெல்மெட் உடைந்தது. அந்த நடுவர்களும் பார்த்தனர். அப்போது எனக்கு 5 வினாடிகள் இருந்தன.

நான் ஹெல்மெட்டை காட்டிய பிறகு வங்காளதேச அணியினர் மேல்முறையீடு செய்ததாக நடுவர்கள் கூறினார்கள்.

எனது இரண்டு நிமிடங்கள் முடிவடையாததால், பொது அறிவு எங்கே என்று கேட்டேன். இதை விளக்குவதற்கு என்னிடம் வார்த்தைகள் இல்லை. எனது 15 ஆண்டுகால சர்வதேச கிரிக்கெட்டில் ஒரு அணியோ அல்லது வீரரோ இவ்வளவு கீழ்நிலையில் இருப்பதை பார்த்ததில்லை. துரதிருஷ்டவசமாக ஹெல்மெட்டின் பட்டை உடைந்தது. அந்த சமயத்தில் இதுபோன்று (டைம் அவுட்) வேறு அணியும் செய்யும் என்று நான் நினைக்கவில்லை. எனது உபகரணம் செயலிழந்தது. இது ஒரு பாதுகாப்பு பிரச்சினை. ஹெல்மெட் இல்லாமல் பந்து வீச்சை எதிர்கொள்ள முடியாது.

ஷாகிப் அல்ஹசன் மீதும் வங்காளதேச அணி மீதும் மிகுந்த மரியாதை வைத்திருந்தேன் என்றார். (ம-7)




### உலகக் கிண்ண கிரிக்கெட் - 2023
### புள்ளிகள் பட்டியல்

| நிலை | அணி | போட்டி | வெற்றி | தோல்வி | புள்ளி |
|---|---|---|---|---|---|
| 1 | இந்தியா | 8 | 8 | 0 | 16 |
| 2 | தென்னாபிரிக்கா | 8 | 6 | 2 | 12 |
| 3 | அவுஸ்திரேலியா | 8 | 6 | 2 | 12 |
| 4 | நியூசிலாந்து | 8 | 4 | 4 | 8 |
| 5 | பாகிஸ்தான் | 8 | 4 | 4 | 8 |
| 6 | ஆப்கானிஸ்தான் | 8 | 4 | 4 | 8 |
| 7 | பங்களாதேஷ் | 8 | 2 | 6 | 4 |
| 8 | இலங்கை | 8 | 2 | 6 | 4 |
| 9 | நெதர்லாந்து | 7 | 2 | 5 | 4 |
| 10 | இங்கிலாந்து | 7 | 1 | 6 | 2 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையில் முதலீடு செய்ய ஈரானுக்கு அழைப்பு

(கொழும்பு)

எரிசக்தித் துறைக்கு மேலதிகமாக விவசாயம் மற்றும் கைத்தொழில் துறையிலும் முதலீடுகளை மேற்கொள்ளுமாறு ஈரானுக்கு பிரதமர் தினேஷ் குணவர்த்தன அழைப்பு விடுத்துள்ளார்.

ஈரானின் புதிய தூதுவர் அலிரேசா டெல்கோஷ் நேற்று முன்தினம் அலரி மாளிகையில்பிரதமர்தினேஷ் குணவர்தனவை சந்தித்துள்ளார்.

இந்த சந்திப்பின் போது பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க மற்றும் ஈரான் தூதரகத்தின் பொருளாதார மற்றும் தூதரகப் பிரிவின் பிரதானி கே சொஹைல் ஆகியோரும் கலந்து கொண்டனர். (நி-5-6)

# இணையவழி பாதுகாப்பு சட்டமூலம் அரசியலமைப்புக்கு முரணானது அல்ல

## உயர்நீதிமன்றம் அறிவிப்பு

(கொழும்பு)

இணையவழி பாதுகாப்பு சட்ட மூலம் அல்லது அதன் சரத்துகள் அரசியலமைப்புக்கு முரணானவை அல்லவென உயர்நீதிமன்றம் வியாக்கியானம் அளித்துள்ளது.

சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்தனவுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள உயர்நீதிமன்ற வியாக்கியானத்தை, பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ பாராளுமன்றிற்கு நேற்று அறிவித்தார்.

இந்த நிலையில், இணையவழி சட்டமூலத்தின் சில சரத்துகளை குழுநிலை விவாதத்தின் போது, திருத்தம் செய்து, அதனை சாதாரண பெரும்பான்மையில் நிறைவேற்ற முடியும் என உயர் நீதிமன்றம் வியாக்கியானம் அளித்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம் பாராளுமன்ற நிகழ்ச்சி நிரலில் உள்ளடக்கப்படாமையினால், அதன் அரசியலமைப்பு தொடர்பான அதிகாரம் உயர்நீதிமன்றத்திற்கு இல்லை என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, அது தொடர்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள 10 மனுக்களின் நடவடிக்கைகளையும் நிறைவுறுத்துவதாக உயர் நீதிமன்றம் பாராளுமன்றுக்கு அறிவிப்படுத்தியுள்ளது. (நி-5-6)

22 கரட்டுக்கு
ரூ.115,000
அதிக அடகுத் தொகை



பான் ஏஷியா ரண அத்தம
தேவைக்கு உதவும் தங்கமான சிநேகிதம்
011 4 667 222
* நிபந்தனைகளுக்கு உட்பட்டது
பான் ஏஷியா பேங்கிங் கோபரேஷன் பி. எல். சி., இலங்கை மத்திய வங்கியின் மேற்பார்வையின் கீழ் நடாத்தப்படும் ஓர் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியாகும்.
கம்பனி பதிவு இலக்கம் PQ48. பிட்ச் ரேட்டிங் BBB-(LKA) Stable Outlook
பான் ஏஷியா வங்கி
உள்ளார்ந்தமான உள்நாட்டு வங்கி
(C-2162)

# இராசிபலன்

08.11.2023
ஐப்பசி 22, புதன்கிழமை
தசமி முற்பகல் 9.14 மணிவரை

பூரம் முன்னிரவு 8.30 மணிவரை
சுபநேரம் 4.35-6.05 மணிவரை
இராகுகாலம் 12.05-1.35 மணிவரை

சந்திராஷ்டமம் - திருவோணம், அவிட்டம்.

வளவன்

**மேஷம்** பிள்ளைகள் குடும் பொறுப்புணர்ந்து நடந்து கொள்வர், தொட்ட காரியங்கயில் முன்னேற்றம் காணும் நாள், தாழ்ந்த சுபாவமுண்டு, வழிபாடு ஆனந்தம் தரும்.

**ரிஷபம்** பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் அதிகரிக்கும், வாகன சுகமுண்டு, சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் நாள், சுப விரயங்கள் கூடும் நாள்.

**மிதுனம்** வம்பு வழக்குகளைச் சமாளித்து வளம் காணும் நாள், பொதுநல ஈடு பாடு அதிகரிக்கும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**கடகம்** குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், சுபநிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**சிம்மம்** அடுத்தவர் விவகாரங்களில் அக்கறை காட்டுவீர்கள், கற்பனை மிகுதியான நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், போசன சுகமுண்டு.

**கன்னி** தொழில் ரீதியான பயணங்கள் இடம் பெறலாம், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள், வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும்.

**துலாம்** பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், எடுத்த காரியங்கள் எளிதில் கைகூடும், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**விருச்சிகம்** உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், பாதியில் நின்ற பணிகளை மீதியும் தொடர்வீர்கள், காரிய அனுகூலமுண்டு.

**தனுசு** வீண் பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும்.

**மகரம்** எந்தக் காரியத்தையும் ஒருமுறைக்கு பலமுறை யோசித்து செய்வது நல்லது, மனதில் இனம்புரியாத கவலைகள் தோன்றி மறையும், உடல் நலனில் கவனம் தேவை.

**கும்பம்** சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், தொழில் வாய்ப்புக்கள் தேடி வரலாம், குடும்பத்தில் கலகலப்பான சூழ்நிலை உருவாகும்.

**மீனம்** உங்களின் திறமைகள் வெளிப்படும் நாள், கடமையில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், போசன சுகமுண்டு, காரிய அனுகூலமுண்டு.

தன்னம்பிக்கை இழந்தவன் எல்லாமே இழந்து விடுவான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நயினாதீவுக்கு விஜயம் மேற்கொண்ட சீனத் தூதுவர்



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டத்திற்கு வருகை தந்துள்ள இலங்கைக்கான சீனத் தூதுவர் கிஸென் ஹொங் தலைமையிலான குழுவினர் நேற்று நயினாதீவுக்கு விஜயம் செய்து பார்வையிட்டதுடன் உலர் உணவுப் பொதிகளும் மக்களுக்கு வழங்கி வைக்கப்பட்டன.

இலங்கை மற்றும் சீனா பௌத்த நட்புறவு சங்கமும் சீனாவின் புத்த சங்கமும் இணைந்து சீனாவில் உள்ள பௌத்த மக்களால் இலங்கையிலுள்ள வறிய மக்களுக்கான உலர் உணவுப் பொதிகளை தெரிவு செய்யப்பட்ட 500 குடும்பங்களுக்கு நயினாதீவு நாக விகாரையில் வழங்கி வைக்கப்பட்டன. (நி-5-6-33)

## உரிமை கோரப்படாத சடலங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா மருத்துவமனையில் அடையாளம் காணப்படாத நிலையில் மூன்று சடலங்கள் உள்ளன. 22.11.2022 அன்று விடுதி இல.34 இல் இறந்த பெயர், வயது, இடம் தெரியாத பெண்ணின் சடலம் ஒன்றும் 24.11.2022 அன்று தெல்லிப்பழை பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்ட பெண்ணின் சடலம் (திருமதி. ரு.கிருசாந்தன்) மற்றும் 22.09.2023 அன்று விடுதி இல-8 இல் இறந்த திரு.நல்லூராஜ் வயது 63 சின்னக்கடையில் வசிக்கும் நபரின் சடலம் என்பன உரிமை கோரப்படாமல் உள்ளன.

எனவே சடலங்களை அடையாளம் காட்டி பெறுப் பேற்றுக்கொள்ளுமாறு யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் எஸ். யமுனானந்தா அறிவித்துள்ளார். (நி-5-6)

# விண்ணப்பங்கள் கோரல்

(யாழ்ப்பாணம்)

2024 ஆம் ஆண்டின் திறமை மேம்பாட்டு நிகழ்ச்சிகளுக்கு வளவாளர்களை (ஆசிரியர்கள்) இணைத்துக் கொள்வதற்காக புத்தசாசனம், மதம் மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சின் சுற்றுநிருபத்திற்கமைவாக சங்கானைப் பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட சங்கானை கலாசார மத்திய நிலையத்திலும் கிராம மட்டங்களிலும் கர்நாடக மற்றும் கிராமிய சங்கீதம், கர்நாடக மற்றும் கிராமிய நடனம், சித்திரம் மற்றும் ஓவியக் கலை, நாடகமும் அரங்கியலும், மிருதங்கம் மற்றும் வயலின் ஆகிய வகுப்புக்களைப் பகுதிநேரமாகப் பயிற்றுவிப்பதற்குரிய ஆசிரியர்களை நியமிப்பதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளது. சங்கானைப் பிரதேச எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

ஆர்வமுள்ளவர்கள் தங்கள் சுயவிபரக் கோவையினை தொலைபேசி இலக்கம் உள்ளடங்கலாக 20.11.2023 ஆம் திகதிக்கு முன்னதாக "கலாசார மத்திய நிலையம் பட்டினசபை வீதி, சங்கானை" எனும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ அனுப்பி வைக்குமாறு சங்கானை கலாசார மத்திய நிலைய பொறுப்பதிகாரி பொ.சிவராஜசிவம் அறிவித்துள்ளார். (நி-5-6)

(யாழ்ப்பாணம்)

புத்தசாசனம், மத அலுவல்கள் மற்றும் கலாசார அமைச்சின் கீழ் செயற்படுகின்ற பருத்தித்துறை கலாசார மத்திய நிலையமானது 2024 ஆம் ஆண்டிற்கான கலை வகுப்புக்களை எதிர்வரும் ஜனவரி மாதத்திலிருந்து ஆரம்பிக்கவுள்ளமையால் ஆர்வமுள்ள வளவாளர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. கர்நாடக சங்கீதம், பரதம், சித்திரம், மிருதங்கம், யோகாசனம், சிங்களம் கற்பிக்க ஆர்வமுள்ள வளவாளர்கள் எதிர்வரும் 24.11.2023 ஆம் திகதிக்கு முன்னதாக "நிலையப்பொறுப்பதிகாரி கலாசார மத்திய நிலையம், புற்றளை, புலோலி எனும் முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு நிலையப்பொறுப்பதிகாரி தி.சுகிந்தன் அறிவித்துள்ளார். (நி-5-6)

# கிளிநொச்சியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையம் முற்றுகை

## 43 கோடா பெரல்கள், 28 லீற்றர் கசிப்பு மீட்பு



(தருமபுரம்)

கிளிநொச்சி பெரியகுளம் பகுதியில் சட்டவிரோத கசிப்பு உற்பத்தி நிலையத்தை தருமபுர பொலிஸார் முற்றுகை யிட்டனர்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பெரியகுளம் பகுதியில் நீண்ட நாட்களாக கசிப்பு உற்பத்தி நடைபெற்று வருவதாக தருமபுர பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலுக்கு அமைவாக நேற்று முன்தினம் முன் னெடுக்கப்பட்ட சோதனை யின்போது 43 கோடா பெரல் களும் 11825 போத்தல் கோடாவும் 28 லீற்றர் கசிப்பும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

சம்பவத்தின்போது சம்பந்தப்பட்ட சந்தேகநபர்கள் தப்பித்து சென்றுள்ளதை யடுத்து தருமபுர பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (நி-5-6-316)



வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையுடன் கரைதுறைப்பற்று பிரதேச செயலகம், கரைதுறைப்பற்று பிரதேச சபை மற்றும் கலாசார பேரவை இணைந்து நடத்திய கரைதுறைப்பற்று பிரதேச பண்பாட்டு விழா நேற்று இடம்பெற்றது.

(படம்: சதீஸ்)

# ஒட்டிசுட்டான் விபத்தில் குடும்பஸ்தர் உயிரிழப்பு

(நெளுக்குளம்)

ஒட்டிசுட்டான் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சமளங்குளம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்திலே உயிரிழந்துள்ளார்.

நெடுங்கேணியில் இருந்து ஒட்டிசுட்டான் நோக்கி சென்ற ஹயஸ் ரக வாகனமும் ஒட்டிசுட்டான் பகுதியில் இருந்து நெடுங்கேணி நோக்கி சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிளும் நேருக்குநேர் மோதியதில் ஒலுமடு நெடுங்கேணி பகுதியை சேர்ந்த 37 வயதுடைய பழனியாண்டி தியாகராசா என்ற குடும்பஸ்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவ்விபத்து சம்பவம் தொடர்பாக ஹயஸ்வாகனத்தின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை ஒட்டிசுட்டான் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். உயிரிழந்தவரின் உடல் முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனையில் பிரேத அறையில் வைக்கப்பட்டு பிரேத பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (நி-5-6-...)

## கச்சாய் பகுதியில் சங்கிலி அறுப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கச்சாய் வீதிப் பகுதியில் நேற்று முன்தினம் திங்கட்கிழமை மதியம் மோட்டார்சைக்கிளில் வந்தோரால் பெண் ஒருவருடைய இரண்டரைப் பவுண் எடை கொண்ட சங்கிலி அறுத்துச் செல்லப்பட்டுள்ளது.

தனது பிள்ளைகளை பாடசாலையில் இருந்து ஏற்றி வருவதற்காக சைக்கிளில் சென்ற பெண் ஒருவருடைய சங்கிலியே இவ்வாறு அறுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத் தில் பதிவு செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-5-6-...)

# கதைகூறல் போட்டிகள்

(சாவகச்சேரி)

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு சாவகச்சேரிப் பிரதேச சபையின் வரணி பொது நூலகத்தின் ஏற்பாட்டில் நூலக எல்லைக்குட்பட்ட முன்பள்ளிச் சிறார்களுக்கான கதை கூறல் போட்டிகள் நாளை வியாழக்கிழமை மு.ப 10 மணிக்கு நூலக மண்டபத்தில் இடம்பெற வுள்ளது.

எனவே வரணி பொது நூலக எல்லைக்குட்பட்ட முன்பள்ளிகள் ஒவ்வொன்றில் இருந்தும் தலா ஒரு மாணவர் விகிதம் போட்டியில் கலந்து கொள்வதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முன்பள்ளி ஆசிரியர்களை வரணி பொது நூலக நூலகர் கேட்டுக் கொண்டுள்ளார். (நி-5-6-30)



கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரியில் நடைபெற்ற அகில இலங்கை தமிழ் மொழித்தின நாட்டிய நாடக குழுப்போட்டியில் யாழ்.இந்து மகளிர் கல்லூரி மாணவிகள் முதலாம் இடத்தினைப் பெற்றுக்கொண்டனர்.

படம்: சிவசாந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் சூழலுக்கு மத்தியிலும் 10 ஆயிரம் இலங்கையர்கள் இஸ்ரேலுக்கு

(கொழும்பு)

இலங்கையிலிருந்து 10 ஆயிரம் பண்ணை தொழிலாளர்களை இஸ்ரேலில் வேலைக்கு அமர்த்துவதற்கு இலங்கை இணக்கம் தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் உள்துறை அமைச்சர் மோஷே ஆர்பெல் மற்றும் இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டாரநாயக்க ஆகியோர் இது தொடர்பான உடன்படிக்கையில் கைச்சாத்திட்டுள்ளனர்.

இந்த ஒப்பந்தத்தின் அடிப்படையில் இலங்கை விவசாயத் தொழிலாளர்கள் எதிர் வரும் வாரங்களில் வர வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

காசா போரினால் இஸ்ரேலின் விவசாயத்துறை கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளதையடுத்தே இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ரி-5-6)

# சிகரெட் பாவனை அதீத அதிகரிப்பு

## ஆய்வில் அதிர்ச்சித் தகவல்

(கொழும்பு)

சிகரெட்டுகளுக்கு விதிக்கப்பட்டுள்ள வரிகளால் இவ்வருடம் எதிர்பார்க்கப்படும் அரசாங்க வருமானம் 52 பில்லியன் ரூபாவால் குறையும் என சந்தை ஆய்வில் தெரியவந்துள்ளது.

அதற்குக் காரணம் பல சந்தர்ப்பங்களில் சிகரெட்டுகளின் விலை அதிகரிப்பு மற்றும் இதன் காரணமாக இந்த நாட்டில் சட்டவிரோத சிகரெட் பாவனையின் போக்கு அதிகரித்து வருகின்றது.

கடந்த வருடமும் சிகரெட் மூலம் அரசாங்கம் எதிர்பார்த்த வருமானம் சுமார் 60 பில்லியன் ரூபாவால் குறைந்துள்ளது.

இதேவேளை, 2022ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், இந்த ஆண்டு சட்டவிரோத சிகரெட் பாவனை 33 வீதத்தால் அதிகரித்துள்ளதாக சந்தை ஆய்வில் தெரியவந்துள்ளது. (ரி-5-6)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 350 | 300 | 320 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 350 | 450 |
| தக்காளி | 250 | 250 | 280 |
| மரவள்ளிக்கிழங்கு | 100 | 100 | 150 |
| கோவா | 360 | 280 | 300 |
| கரட் | 400 | 330 | 350 |
| பூசணி | 100 | 80 | 80 |
| புடோல் | 200 | 200 | 180 |
| வாழைக்காய் | 180 | 180 | 150 |
| சின்ன வெங்காயம் | 380 | 350 | 400 |
| பெரிய வெங்காயம் | 300 | 280 | 300 |
| பாகற்காய் | 350 | 400 | 400 |
| வெண்டக்காய் | 240 | 200 | 220 |
| கருணைக் கிழங்கு | 140 | 100 | 120 |
| பயிற்சிங்காய் | 400 | 300 | 280 |
| லீக்ஸ் | 250 | 200 | 200 |
| பீற்றூட் | 150 | 140 | 180 |
| கறிமிளகாய் | 500 | 350 | 500 |
| முருங்கைக்காய் | 400 | 350 | 400 |
| போஞ்சி | 400 | 550 | 400 |
| கத்தரிதம்புள்ள | 330 | 200 | 320 |
| கீரை - 1 பிடி | 100 | 80 | 80 |
| தேசிக்காய் | 1400 | 1200 | 1400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 80 |
| இராசவள்ளி | 450 | 450 | 500 |
| வெங்காயப்பூ | 450 | 350 | -- |
| முள்ளங்கி | 120 | 150 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 |
| வல்லாரை | 40 | 35 | 50 |
| ஈரப்பலா | 100 | 150 | 120 |


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



சர்வதேச ஐக்கிய கலாம் நிறுவகத்தின் 2023 ஆம் ஆண்டிற்கான விருது வழங்கும் நிகழ்வில் விருதுபெற இந்தியா சென்ற வேளை மதுரை மாவட்டம், உசிலம்பட்டி தமிழக மாநில சட்டசபை பிரதிநிதி கௌரவ P.ஐயப்பன் (MLA) அவர்களால் 16.10.2023 அன்று மதுரை ஜெயராம் ஹோட்டலில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் யாழ்ப்பாணம் கோண்டாவிலைச் சேர்ந்த பிரபல சமூக சேவையாளரும் கல்விக் கொடையாளருமாகிய

**கலாநிதி இராசையா குவேந்திரநாதன்**

அவர்களின் தன்னலங்கருதா சமூக சேவையினைப் பாராட்டி அதி உயர் சமூக சேவையாளன் விருது வழங்கி கௌரவிக்கப்பட்டமையை நாமும் பாராட்டுவதோடு அவரது சமூகசேவை மென்மேலும் தொடர வாழ்த்துகின்றோம்.

உரிமையாளரும்,ஊழியர்களும், கணேசன் ஸ்ரோஸ்,
201 .கே .கே .எஸ் வீதி யாழ்ப்பாணம். (17622)


## நல்லூர் பிரதேச சபை - கொக்குவில் ஆதனவரி (சோலைவரி) செலுத்துதல் தொடர்பான அறிவித்தல்

எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் ஆதனவரி செலுத்தும் நடைமுறை கணனி மயப்படுத்தப்பட உள்ளது. அதற்குரிய தொழில்நுட்ப வேலைகள் இவ்வருடம் டிசெம்பர் மாதம் இடம்பெறவுள்ளதால் அதற்கான நடவடிக்கைகளின் பொருட்டு 2023 ஆம் ஆண்டு டிசெம்பர் 01 ஆம் திகதி தொடக்கம் 31 ஆம் திகதி வரை ஆதனவரி (சோலைவரி) செலுத்தும் நடவடிக்கைகள் தற்காலிகமாக இடைநிறுத்தப்படவுள்ளன. எனவே 2023 ஆம் ஆண்டுக்கான ஆதனவரிகளை (சோலைவரி) 30.11.2023 இற்கு முன்னர் செலுத்துமாறு பொதுமக்களுக்கு அறியத் தருகின்றோம்.

**செயலாளர்,**
**நல்லூர் பிரதேச சபை.**
**08.11.2023.**

(ரி-7578)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்

04.11.2023 அன்று இலங்கை அதிபர் சேவை III இற்கான நியமனத்தைப் பெற்றுக்கொண்ட எமது கல்லூரியின் ஆசிரியப் பெருந்தகைகளான



திரு.சுப்பையா கமலதாஸ்



திருமதி.வசந்தகுமார் ராசரஞ்சினி



திருமதி.ருகுணன் இராகினி

ஆகியோரைப் பாராட்டி வாழ்த்துவதோடு மேலும் பதவி உயர்வுகள் பெற்று சேவையில் சிறந்து விளங்க இறை ஆசிகள் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வாழ்த்துவோர்:
சேவையாளர் சங்கம்,
யா/மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## உயிரிழந்த உடல்களை சுமந்து செல்லும் கழுதைகள்

### காசாவின் அவலநிலை



(காசா)

காசாவில் அம்புலன்ஸ்களை அழைப்பதற்கு வழியில்லாததால் கழுதைகளை பயன்படுத்தி உயிரிழந்தவர்களின் உடல்களை கொண்டு செல்கின்ற அவலம் தோன்றியுள்ளதாக வைத்தியர் ஒருவர் சர்வதேச ஊடகம் ஒன்றிற்கு தெரிவித்துள்ளார்.

தொடர்பாடல் இணைப்புக்கள் துண்டிக்கப்பட்டுள்ளது. இதனால் தொலைபேசி இயங்காததால் காசாவில் மிகவும் நெருக்கடியான நிலைமை காணப்படுகின்றது.

அம்புலன்ஸ்களை தொடர்பு கொள்ள முடியாததால் மக்கள் கழுதைகளிலும் தங்கள் வாகனங்களிலும் உடல்களை கொண்டு செல் கின்றதாகவும் காசா அல்சிபா மருத்துவமனையின் இயக்குநர் தெரிவிக்கின்றார்.(நி-5-6)

## இஸ்ரேல் மீது மீண்டும் த

## அமெரிக்க இராணுவ

### ஈரான், ஹிஸ்புல்லா அமைப்

(வோஷிங்டன்)

**இஸ்ரேல் மீது மீண்டும் தாக்குதல் நடத்தினால் களத்தில் இறங்க அமெரிக்க இராணுவம் தயாராக ஈரானையும் ஹிஸ்புல்லா அமைப்பையும் அமெரிக் துள்ளது.**

இஸ்ரேல் - காசா போர் துவங்கியதிலிருந்தே, லெபனானிலிருக்கும் ஈரான் ஆதரவு பெற்ற ஹிஸ்புல்லா என்னும் போராளிக்குழு இஸ்ரேலுக்கு எதிராக செயற்பட்டு வருகின்றது.

இந்த நிலையில், இஸ்ரேல் லெபனான் மீது தாக்குதல் நடத்தியதில் அப்பாவி பொதுமக்கள் கொல்லப்பட்டதாக கூறி ஹிஸ்புல்லா அமைப்பினர் இஸ்ரேலை தாக்கியதில் இஸ்ரேல் தரப்பில் ஒருவர் கொல்லப்பட்டதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமெரிக்கா கடந்த மாதம் விமானம் தாங்கிக் கப்பல்களை மத்தியதரைக்கடல் பகுதிக்கு அனுப்பியுள்ளது. இதற்கிடையில், ரஷ்ய கூலிப் படையான வாக்னர் குழு.

## அவுஸ்திரேலிய பாராளுமன்றத்தில் பாலஸ்தீன கொடி-கிறீன்ஸ் கட்சியினர் வெளிநடப்பு

(கன்பரா)

அவுஸ்திரேலிய அரசாங்கம் காசா விவகாரத்தில் யுத்த நிறுத்தத்திற்கு அழைப்பு விடுக்காதமைக்கு எதிர்ப்பு தெரிவித்து கிறீன்ஸ் கட்சியினர் பாராளுமன்றத்திலிருந்து வெளிநடப்பு செய்துள்ளனர்.

இந்நிலையில் நேர்மையற்ற வார்த்தைகள், யுத்த குற்றங்களை தடுக்க உதவப் போவதில்லை என கிறீன்ஸ் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் மெஹ்றீன் பாருக்கி தெரிவித்துள்ளார்.

அத்துடன் மக்கள் எதிர்ப்பை பாராளுமன்றத்திற்கு கொண்டுவரப்போவதாக தெரிவித்துள்ள அவர் சுதந்திர பாலஸ்தீனம் என கோசம் எழுப்பினார்.

இதன் பின்னர் கிறீன்ஸ் கட்சியின் செனெட்டர்கள் 11 பேரும் வெளிநடப்பு செய்த நிலையில் ஜெனெட் ரைஸ் பாலஸ்தீன கொடியை தூக்கி காண்பித்தமை பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.(நி-5-6)

## மேற்குக் கரையில் ஒரே இரவில் 70 பாலஸ்தீனியர்கள் கைது



(காசா)

ஆக்கிரமிக்கப்பட்ட மேற்குக் கரையில் ஒரே இரவில் இஸ்ரேலிய தாக்குதல்களில் 70 பாலஸ்தீனியர்கள் கைது செய்யப்பட்டதாக பாலஸ்தீனிய கைதிகள் ஆணைக் குழு தெரிவித்துள்ளது.

ரமல்லா, ஹெப்ரோன் மாவட்டம், கல்கிலியா, நப்லஸ் மற்றும் ஷுஃபத் அகதிகள் முகாமில் இந்த கைது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதாகவும் இதுவரை 49 பெண்கள் மற்றும் 17 ஊடகவியலாளர்கள் உட்பட 2,000 இற்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (நி-5-6)

## இஸ்ரேல்-ஹமாஸ் தாக்குதலில் 40 பிரான்ஸ் நாட்டவர்கள் பலி

### பிரதமர் எலிசபெத் போர்ன்



(பாரிஸ்)

தாக்குதலில் இதுவரையில் 40 இற்கும் அதிகமான பிரான்ஸ் நாட்டவர்கள் பலியாகியுள்ளதாக பிரான்ஸ் பிரதமர் எலிசபெத் போர்ன் தெரிவித்துள்ளார்.

ஒரு மாதத்திற்கும் மேல் போர் தொடர்ந்து வரும் நிலையில், ஆயிரக்கணக்கான மக்கள் பலியாகியுள்ளதோடு பல்லாயிரக்கணக்கான மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த தாக்குதலின் போது, 240 பேர் ஹமாஸ் படையினரால் பணயக் கைதிகளாக பிடித்துச் செல்லப்பட்டனர்.

இந்நிலையில் இஸ்ரேல் ஹமாஸ் தாக்குதலில் பிரான்ஸ் நாட்டை சேர்ந்த 40 பேர் கொல்லப்பட்டுள்ளதாகவும் 8 பேர் காணாமல் போயுள்ளதாகவும் சிலபேர் ஹமாஸ் படையினரால் பிடித்து வைக்கப்பட்டு இருக்கலாம் எனவும் பிரான்ஸ் பிரதமர் எலிசபெத் போர்ன் தெரிவித்துள்ளார். (நி-5-6)

## இஸ்ரேலில் இருந்து தங் திரும்பப் பெறும் தென்னா

(காசா)

தென்னாபிரிக்கா மற்றும் சாட் நாடுகள் இரண்டும் இஸ்ரேலில் இருந்து தங்கள் இராஜதந்திரிகளை திரும்பப் பெற்றதாக அறிவித்துள்ளன.

தென்னாபிரிக்க வெளியுறவு அமைச்சர் நலேடி பாண்டோர் ரொய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திடம், தென்னாபிரிக்கா, இஸ்ரேலில் உள்ள தனது தூதரக அதிகாரிகளை திரும்ப அழைப்பதாக தெரிவித்துள்ளார்.

தென்னாபிரிக்கா "குழந்தைகள் மற்றும் அப்பாவி பொதுமக்கள் தொடர்ந்து கொல்லப்படுவதில் மிகுந்த அக்கறை கொண்டுள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ் தாக்குதல் நடத்தினால்

# வம் களம் இறங்கும்

## ப்பை எச்சரிக்கும் அமெரிக்கா


ால், நேரடியாக ராக இருப்பதாக மரிக்கா எச்சரித்



ஹிஸ்புல்லா அமைப்புக்கு உதவ முன்வந்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளதால் பாரிய யுத்தம் ஏற்பட்ட வாய்ப்புள்ளதாக பூகோள அரசியல் ஆய்வாளர்கள் தெரிவித்து வருகின்றனர்.

இந்தநிலையில், பாலஸ்தீனத் திற்கு எதிராக அமெரிக்கா தாக்குதல் நடத்தினால் பாரிய விளைவை சந்திக்க நேரிடும் என ஈரான் அமெரிக்காவை எச்சரித்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)

## நைஜீரியாவில் தீ விபத்து 2 பேர் பலி, 2 பேர் காயம்



(அபுஜா)

நைஜீரியாவில் கனேடிய உயர்ஸ்தானிகராலயத்தில் ஏற்பட்ட தீ விபத்தில் இரண்டு பேர். உயிரிழந்துள்ளனர்.

இந்த தீ விபத்துச் சம்பவத்தில் மேலும் இரண்டு பேர் காயமடைந்துள்ளனர்.

இந்த விபத்துச் சம்பவம் நைஜீரியாவின் அபுஜாவில் அமைந்துள்ள கனேடிய உயர்ஸ்தானிகராலயத்தில் இடம்பெற்றுள்ளது.

மின்பிறப்பாக்கி வைக்கப்பட்டிருந்த அறையில் ஏற்பட்ட விபத்தினால் இவ்வாறு 2 பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்த சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (நி-5-6)

## நேபாளத்திற்கு நிவாரண உதவி வழங்கிய இந்தியா


(காத்மண்டு)

நிலநடுக்கத்தால் பாதிக்கப்பட்டுள்ள நேபாள நாட்டிற்கு இந்தியா தொடர்ந்து நிவாரண உதவிகளை வழங்கி வருகிறது.

இந்திய விமானப் படையின் C-130 விமானம் நேற்று 9 தொன் அளவிலான நிவாரணப் பொருட்களுடன் அனுப்பி வைக்கப்பட்டது.

பாதிப்படைந்த நேபாளத்திற்கு முதன்முதலில் நிவாரணங்களை இந்தியா அனுப்பியுள்ளதாக நேபாளத்திலுள்ள இந்திய தூதரகம் தன் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

நிலநடுக்கத்தால் பாதிப்படைந்த நேபாளத்திற்கு கடந்த ஞாயிற்றுக்கிழமை அவசர முதலுதவிகளுக்குத் தேவையான மருத்துவ உபகரணங்களை நேபாள் கான்ஞ் நகரத்திற்த இந்தியா அனுப்பியமை குறிப்பிடத்தக்கது. (நி-5-6)



## உக்ரைனில் நடைபெற்ற விழாவில் ரஷ்யா ஆளில்லா விமானத் தாக்குதல்



(மொஸ்கோ)

உக்ரைனின் சபோரிஜியா மாகாணத்தில் ரஷ்ய இராணுவம் நடத்திய தாக்குதலில் 28 வீரர்கள் கொல்லப்பட்டதுடன் 53 பேர் காயமடைந்துள்ளதாகவும் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்துடன் உக்ரைன் இராணுவம் மீது தாக்குதல் நடத்தியதாக கூறப்படும் வீடியோவை ரஷ்ய ஊடகங்கள் வெளியிட்டன.

அதில் உக்ரைனில் இராணுவ வீரர்களுக்கு விருது வழங்கும் விழா நடைபெறும் இடத்தில் ரஷ்ய ஆளில்லா விமானம் ஒன்று சுற்றிக் கொண்டிருந்த காட்சியும் அப்போது இஸ்கந்தர் ஏவுகணை தாக்கும் காட்சியும் அந்த வீடியோவில் இடம்பெற்றுள்ளன. (நி-5-6)

## ங்கள் இராஜதந்திரிகளை னாபிரிக்கா, சாட் நாடுகள்

ளது" என்று பாண்டோர் மேலும் கூறினார்.

தென்னாபிரிக்காவிற்கு இஸ்ரேலில் ஒரு தூதுவர் இல்லை. ஆனால் மூன்று இராஜதந்திரிகள் உள்ளனர்.


கடந்த மார்ச் மாதம், தென்னாபிரிக்காவின் பாராளுமன்றம் இஸ்ரேலுடனான தனது உறவை குறைக்கும் தீர்மானத்தை நிறைவேற்றியது.

இதேவேளை சாட் நாடும் நவம்பர் 4 அன்று சாட் இஸ்ரேலில் உள்ள தூதுவர்களை திரும்ப அழைத்ததாக சி.என்.என் தெரிவித்துள்ளது. (நி-5-6)

## சிறுவர்களின் மயானமாகும் காசா ஐ.நா பொதுச்செயலாளர் எச்சரிக்கை

(நியூயோர்க்)

காசா சிறுவர்களின் மயானமாக மாறிவருவதாக ஐக்கிய நாடுகள் சபை எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்த விடயம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் அன்டனியோ குட்டரஸ்ட் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



குறித்த விடயம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இது மனிதாபிமான நெருக்கடியை காட்டிலும், மனித குலத்தின் நெருக்கடியாகும் என அவர் தெரிவித்துள்ளார்.

தினந்தோறும் நூற்றுக்கும் மேற்பட்ட சிறுவர்கள் மற்றும் பெண்கள் கொல்லப்படுகின்றனர்.

எனவே, உடனடியாக போர் நிறுத்தத்தை அமுல்படுத்துவதற்கு இரு தரப்பினரும் இணங்க வேண்டும் என அவர் அறிவுறுத்தியுள்ளார். (நி-5-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுண்ணுயிரெதிர்ப்புத் தடையின் அதிகரிப்பு: மீண்டும் ஓங்கியொலிக்கும் அபாயவொலி!



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்

**வாருங்கள் எம்மினிய உறவுகளே!**

அனைத்து மக்களுக்குமான கோரிக்கையாக மீண்டுமொரு தடவை அபாயவொலி ஒலித்திருக்கின்றது. நாம் பயன்படுத்தும் நுண்ணுயிரெதிர்ப்பு மருந்துகள் (Ant ibiotics)பற்றியதும் அவற்றின் தவறானப்பாவனையால் உடல் தேகாரோக்கியம் பாதிக்கப்படும் நிலைபற்றிய விழிப்புணர்வுகளை காட்டியிருக்கின்றது. மருத்துவ துறையினால் முன்னெடுக்கப்படும் இவ் விழிப்புணர்வு உலக சுகாதார ஸ்தாபனத்தின் முன்முயற்சியால் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.

நுண்ணுயிரெதிர்ப்புத டைகள் (Antibiotic resistance) உருவானதன் பின்னணியில் நுண்ணுயிரெதிர்ப்பு மருந்துகள் அவசியமற்று தவறாக பயன்படுத்தினால் பின்னர் அவற்றினை தேவை கருதி பயன்படுத்த முடியாமல் போய்விடும். ஒவ்வொருமுறையும் மேற்கொள்ளப்படும் உடற் பரிசோதனைகளின் அடிப்படையிலேயே நுண்ணுயிரெதிர்ப்பு மருந்துகள் பயன்படுத்தப்படல் வேண்டும் எனப ரிந்துரைக்கப்பட்டிருப்பதனை நாம் அவசியம் புரிந்து கொள்வதுடன் அதற்கேற்ப மருத்துவரை அணுகி அவரின் ஆலோசனைக்கேற்ப பயன்படுத்தல் வேண்டும்.


உலகெங்கும் மக்களின் உயிர்களைக் காவுகொல்லும் போர் மேகம் சூழ்ந்திருக்கும் இவ்வேளையில் கண்ணுக்குத் தெரிந்து பலவுயிர்கள் கொல்லப்படும் காணொளிகளை கண்டபின்னும் எமக்குத் தெரியாமலேயே எமதுயிரைக் காவுகொள்ளும் நுண்ணுயிரெதிர்ப்பு தடையின் அதிகரிப்பு இன்னொரு பக்கத்தில் பாரிய பிரச்சினையாக எழுந்திருக்கின்றது. இதனை சந்தடியில்லாமல் காவுகொள்ளல் (Silent killing) என கருதப்படுகின்றது.

வழமையாக எமக்கேற்படும் தொற்றுக்களுக்கு அவற்றை குணமாக்க நுண்ணுயிரெதிர்ப்பு மருந்துகள் பரிந்துரைக்கப்படுவது வழமை. இது தேவை கருதி அவற்றினது அதிகூடிய வினைத்திறனை பெறக்கூடிய வகையில் மருத்துவரினால் பரிந்துரைக்கப்படுகின்றது. தொடர்ச்சியாக இவ்வாறான நுண்ணுயிரெதிர்ப்பு மருந்துகளை உட் கொள்ளக் கூடாது. ஒரு சிலருக்கு மருந்து என்று ஏதேனும் ஒன்றைவாய்க்குள் திணித்தால் தான் அன்றைய பொழுது விடிகின்றது. இதனை அவதானித்தன் விளைவாக நோயாளியின் மனோநிலையை தக்க வைக்க விற்றமின் சீ மற்றும் ஏனைய விற்றமின் குளிகைகளை பரிந்துரைக்கின்றனர்.

இதனை புரிந்திராத நிலையில் நோயாளிகள் பரிந்துரைக்கப்பட்ட மருந்துகள் முடிவடைந்தவுடன் மேற்கொண்ட நோயின் அறிகுறிகள் தொடரும் பட்சத்தில் தாமாகவே தமக்கு மருத்துவராகி தொடர்ச்சியாக ஏற்கெனவே பரிந்துரைக்கப்பட்ட நுண்ணுயிரெதிர்ப்பு மருந்துகளை தொடர்ச்சியாகப் பயன்படுத்துகின்றனர். அதிகளவில் நுண்ணுயிரெதிரி மருந்துகளை பயன்படுத்துவதும் தேவையான அளவுக்கு குறைவாக பயன்படுத்துவதும் ஆபத்தானது என சுட்டிக் காட்டப்படுகின்றது.

அலெக்சாண்டர் பிளெமிங் என்னும் விஞ்ஞானியால் 1928 களில் அவரது ஆய்வு கூடத்தில் நுண்ணங்கி வளர்ப்பு செயன் முறையில் குறிப்பாக பெற்றிக் கிண்ணத்தில் வளர்க்கப்பட்ட ஸ்ரைபலோகொக்கசு என்னும் பக்ரீறியா நுண்ணங்கியினை கட்டுப்படுத்தும் நுண்ணங்கி எதிர்ப்பு வளையம் (inhibition zone) உருவாக்கப்பட்டிருந்தமையும் அதற்கு காரணமான வழமையாக தொற்றுப் பூஞ்சண வகைகளில் ஒன்றான பெனிசிலியம் நோட்டேற்றம் (Penicilium notatum) என்னும் பூஞ்சணத்தால் உருவாக்கப்பட்டதனை முதன் முதலில் அவரது

## இனியொரு பசுமைப்புரட்சிக்கு...




கண்டுபிடிப்பாக பெனிசிலின் (Peni cilin) என்னும் நுண்ணுயிரெதிர்ப்பு மருந்தினை உலகுக்கு வெளிக் கொணர்ந்தார்.

1930 இல் புரொன்டோசில் (Prontocil) எனப்படும் சல்பொனமைட் வர்த்தக ரீதியில் நுண்ணுயிரெதிர்ப்பு மருந்தாக உலகுக்கு அறிமுகப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் தான் பெனிசிலின் வர்த்தக ரீதியில் 1945இல் உருவாக்கப்பட்டு அதிகளவில் தொற்று நோய்களை கட்டுப்படுத்த பயன்படுத்தப்பட்டது.

ஆனால் நுண்ணுயிரெதிரியின் தந்தையாக சல்மான் வேர்க்ஸ்மான் ( Selman Waksman) அறிவிக்கப்பட்டுள்ளார். 1942 இல் பிரசுரிக்கப்பட்ட இவரது விஞ்ஞானக் கட்டுரையில் முதன் முதலாக நுண்ணுயிரெதிர்ப்பு (Antibiotics) என்னும் பதத்தை அறிமுகப்படுத்தியிருந்தார். 1952இல் முதன் முதலாக காச நோய்க்கு எதிராக கண்டு பிடித்த ஸ்ரெப்ரோமைசின் (Streptomycin) எனப்படும் நுண்ணுயிரெதிர்ப்பு மருந்துக்காக இவருக்கு இழையவியல் மற்றும் மருத்துவத்தில் நோபல் பரிசு வழங்கப்பட்டதுடன் முழுமையான நுண்ணுயிரெதிர்ப்பு மருந்தின் உற்பத்தி வர்த்தக அளவில் உருவாக்கப்பட்டது.

1939 இலிருந்து நுண்ணுயிரெதிர்ப்பு மருந்துகள் பல மாறிமாறி கண்டுபிடிக்கப்பட்டன. எமக்கு நுண்ணுயிரெதிர்ப்பு மருந்துகளாக ரெயிக்சோ மக்சின், மெதிசிலின் முதல் ஆரம்பத்தில் அறிமுகமான ஆறு லட்சம் குளிசை என அழைக்கப்பட்ட ரெட்ரா சைக்கிளின் (Tetracyclin) தொடங்கி ரெராமைசின், ஸ்ரெப்ரோமைசின், அம்பிசிலின், அமொக்சிசிலின், அமைனோகிளைக்கோசைட்டு (ஜென்ராமைசின் மற்றும் ரொப்றாமைசின்), செபைலோபோறின்ஸ் என தொடர்ந்து கண் மற்றும் காது சொட்டு மருந்தான குளோரம் பெனிக்கொல் (Chloremphenicol) தவிர்ந்த புளுரோகுயினோலோன்ஸ், மக்றோலைட்ஸ் (அசித்துருரோமைசின் மற்றும் கிளாறித்துரோமைசின்) உட்படதற்போது அநேகமாக பரிந்துரைக்கப்படும் இணைந்த மருந்தான ஒக்மென்ரின் (Augmentin) இனையும் தாண்டி செயற்கையாக உருவாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

இம் மருந்துகள் தேவைக் கேற்ப பயன்படுத்தும் போது அவற்றினால் நுண்ணங்கி தொற்றினை கட்டுப்படுத்தக் கூடியதாக இருக்கின்றது. இவையனைத்தும் வேதியியல் பொருட்களாகவும் தொற்றான பக்ரீறியாவை விரைந்து கட்டுப்படுத்தும் கருவியாகவும் பயன்படுத்தப்படுகின்றது. சரியான அறிவின்றி எழுந்தமானமாக இவ்வாறான நுண்ணுயிரெதிர்ப்பு மருந்துகளை பயன்படுத்தும் போது அவற்றுக் கெதிராக ஆரம்பத்தில் சிறிதளவில் உருவாகும் நுண்ணுயிரெதிர்ப்புதடை (Antibiotic Resistance) நுண்ணங்கிகள் நாளடைவில் அவற்றின் எண்ணிக்கை பல்கிப் பெருகி குறிப்பிட்ட நுண்ணுயிரெதிர்ப்புக்கு கட்டுப்படுத்தப்படாது போய்விடுகின்றது.

மருத்துவ உலகத்தில் தான் இவ்வகையான நுண்ணுயிரெதிரிகள் கண்டு பிடிக்கப்பட்டு பயன்பாட்டிலுள்ளன. ஆனால் விவசாயத்தில் பயிர்களில் ஏற்படும் பக்ரீறியா நோய்களைக் கட்டுப்படுத்த இதுவரைக்கும் வினைத்திறனான எந்த நுண்ணுயிரெதிரியும் கண்டுபிடிக்கப்படவில்லை. விவசாய பெருமக்கள் ரெற்றாசைக்கிளின் குளிகைகளை கரைத்து பயிர்களுக்கு விசிறியதையும் அறியக்கிடைத்தது. ஆனால் பக்ரீறிய நோய்களுக்கு எந்தவிதமான மருந்துகளையும் சந்தையில் வாங்கி பயன்படுத்த முடியாது.

பக்ரீறியாவினால் ஏற்படுத்தப்படும் பக்ரீறியாவாடல், இலையழுகல், வெளிறல் மற்றும் சந்தைப்படுத்தலில் பழங்களில் ஏற்படும் பக்ரீறியா அழுகல் என்பனவற்றுக்கு பக்ரீறிசைட்டு (Bactericide) என பயன்பாட்டில் இல்லை. பக்ரீறியா மற்றும் வைரசு நோய்களுக்கு அவற்றினைக் கட்டுப்படுத்தும் மருந்துகளாக எதுவும் இதுவரையில் சந்தையில் இல்லை. ஆய்வுகூடங்களில் மிகச் சிறிய அளவில் பக்ரீறியாவை கட்டுப்படுத்தும் வர்த்தக ரீதியிலான பீடைநாசினிகள் உருவாக்கப்படவில்லை என்றே கூறலாம். ஆனால் கால்நடைகளில் ஏற்படும் பக்ரீறியா நோய்களுக்காக ரெற்றாசைக்கிளின் இன்னும் பல நுண்ணுயிரெதிரி பயன்படுத்தப்படுகின்றது.

மாறாக தாவரங்களிலும் பக்ரீறியாவை கட்டுப்படுத்தும் நுண்ணுயிரெதிரிகளைக் கொண்டிருப்பது அறியக் கிடைத்திருக்கிறது. லாமியேசியே குடும்பத்தைச் சேர்ந்த தைம் எனப்படும் மூலிகைத் தாவரத்தில் லக்ரோபசிலசுபிளான்ரேறம், புறோக்கோதிறிக்ஸ் மற்றும் பிறேவி பக்றிறியம் லைனெஸ் ஆகிய பக்ரீறியாக்களை கட்டுப்படுத்தும் நுண்ணுயிரெதிரிகள் காணப்படுகின்றன. இயற்கையான உள்ளி, தேன், இஞ்சி, எக்கினேசியாபேர்ப்பியூறியா, கோல்டன் சீல் மற்றும் கராம்பு ஆகிய பொருட்களிலும் நுண்ணுயிரெதிரிகள் அதிகளவில் காணப்படுகின்றன.

அருமைபெருமையாக கிடைத்திருக்கும் நுண்ணுயிரெதிரிகளை நாம் அவதானத்துடன் மருத்துவரின் உதவியுடன் கையாண்டால் எமது உடலை தேகாரோக்கியமுள்ளதாக மாற்றிவிடலாம். இது பற்றிய விழிப்புணர்வு அனைத்து மக்களிடையே அவசியம் ஏற்படுத்த வேண்டும். இவ்வறிவு அதிகமல்லாதவர்களுக்கு இம்மருந்தின் செயற்பாடு, அதனது பயன்பாடு பற்றிய அறிவினை வழங்க வேண்டும். பாடசாலைகளில் கற்கும் மாணவர்களுக்கு இவற்றினைப் பற்றி தெளிவுபடுத்தினால் அதனை அவர்கள் தங்களது குடும்ப சுகாதாரத்தை பேணுவதற்கு நிச்சயம் பயன்படுத்துவர். பரந்துபட்ட அளவில் தேவை கருதிய இவ்வகை நுண்ணங்கிகள் மற்றும் நுண்ணுயிரெதிரியின் பயன்பாடு பற்றிய தெளிவூட்டலை விரிவாக்க கல்விப் புலமும் மருத்துவ உலகும் இணைந்து மேற்கொள்ளல் வேண்டும். ஒருயிர் காக்க அவசியமான விழிப்புணர்வினை இளையவர்களினூடாக வழங்குதல் என்றுமே சிறப்புக்குரியதும் வினைத்திறனாகவுமிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாயக மண்ணை சீனாவிடமிருந்து பாதுகாக்ககோரி வவுனியாவில் போராட்டம்




(வவுனியா)

வடகிழக்கு பிராந்தியத்தில் அமெரிக்கா தலையிட்டு தமிழர் பிரதேசங்களை சீனாவின் அத்துமீறலில் இருந்து பாதுகாக்க வேண்டும் என வலியுறுத்தி காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களால் நேற்று வவுனியாவில் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களின் 2450 ஆவது நாளாக சுழற்சி முறை போராட்டம் பிரதான தபாலகத்திற்கு அருகாமையில் உள்ள கொட்டகைக்கு முன்னால் இடம்பெற்றிருந்தது.

இலங்கையின் வடகிழக்கு பிராந்தியத்தில் அமெரிக்கா தலையிட்டு தமிழர் பிரதேசங்களை சீனாவின் அத்துமீறலில் இருந்து பாதுகாக்க வேண்டும் என்றும் காணாமல் ஆக்கப்பட்ட தமிழர்களின் தாய்மார்களாகிய நாம் எமது தமிழர் தாயகத்தில் உள்ள காணிகளிலும் மீன்பிடி நீரிடத்திலும் சீனாவின் அத்துமீறலை வன்மையாக எதிர்க்கிறோம் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் இதன்போது வலியுறுத்தியுள்ளனர். (நி-5-6)

# புதுமாத்தளன் கடற்கரையில் கஞ்சாப் பொதிகள் மீட்பு



(நெளுக்குளம்)

புதுமாத்தளன் கடற்கரையில் 22 கிலோகிராம் கஞ்சா பொதியினை கைப்பற்றிய முல்லைத்தீவு பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புதுமாத்தளன் கடற்கரையில் பொதிகள் காணப்படுவதாக நேற்று இராணுவ புலனாய்வு பிரிவினருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து முல்லைத்தீவு பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டதையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்து சென்ற முல்லை பொலிஸார் குறித்த கடற்கரை பகுதியில் கரை ஒதுங்கி கிடந்த தலா 22 கிலோ கிராம் நிறையுடைய கஞ்சா பொதிகளை கைப்பற்றினர்.

குறித்த விடயம் தொடர்பில் எவரும் கைது செய்யப்படாத நிலையில் விசாரணைகளின் பின்னர் கஞ்சா பொதிகளை நீதிமன்றத்தில் முற்படுத்தப்படவுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-5-6-299)




பொலநறுவையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இளைஞர், கனிஷ்ட மற்றும் சிரேஷ்ட மாணவர்களுக்கான பளுதூக்கும் போட்டியில் கோமரசங்குள பாடசாலை மாணவிகளான க.அபிசாளினி மற்றும் பா.மதுசாளினி - 1 ஆம் இடத்தையும் பா.கிசாளினி மற்றும் பா.செரோண்யா - 2 ஆம் இடத்தையும் பெற்றுள்ளனர். (படம்-சதீஸ்)

# வீடொன்றில் பதுக்கி வைத்திருந்த 47 கிலோ கஞ்சாவுடன் சந்தேகநபர் கைது



(தருமபுரம்)


வீடு ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 47 கிலோ கஞ்சாவுடன் நபரொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இரணைமடு கனகாம்பிகைப் பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கஞ்சா மறைத்து வைக்கப்பட்டுள்ளது என பொலிஸாருக்குக் கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது 47 கிலோ கஞ்சாவுடன் கைதான சந்தேக நபரையும் கிளிநொச்சி மாவட்ட நீதிமன்றில் நேற்று முற்படுத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-5-6-316)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2961

### நிர்மலன்




### நிலானி




### ஜெமிலன்




### ஜானு




### தீபிகா




### ஜெம்சி




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பி[illegible] www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 329





நாட்கள், மாதங்கள், வருஷங்கள் இவ்விதம் சென்றன. எத்தனை நாள் அல்லது வருஷம் ஆயிற்று என்பதைக் கணக்குப் பார்க்கவே அவன் மறந்துவிட்டான்.

வாலிபனுடைய இந்த சொர்க்க வாழ்வுக்குத் திடீரென்று ஒருநாள் முடிவு நேர்ந்தது. கப்பல் ஒன்று அந்தத் தீவின் அருகில் வந்து நின்றது. அதிலிருந்து படகிலும் கட்டு மரங்களிலும் பலர் இறங்கி வந்தார்கள். அவர்கள் யார் என்று பார்க்க வாலிபன் அருகில் சென்றான். தன்னைத் தேடிக் கொண்டு தான் அவர்கள் வந்திருக்கிறார்கள் என்று அறிந்தான். அவனுடைய நாட்டில் எதிர்பாராத நிகழ்ச்சிகள் பல நடந்து விட்டன. அவனுடைய தந்தைக்கு மூத்த சகோதரர்கள் இருவர் இறந்து போய் விட்டார்கள். இன்னொருவருக்குப் புத்திர சந்தானம் இல்லை. ஆகையால் ஒரு பெரிய சாம்ராஜ்யம் அவனுக்காகக் காத்திருக்கிறது என்று தெரிந்து கொண்டான். அவனுடைய உள்ளத்தில் ஒரு பெரிய பூசல் ஏற்பட்டது. அந்த அழகிய தீவையும் அதைச் சொர்க்க பூமியாக்கிய ஊமைப் பெண்ணையும் விட்டுப் போக அவனுக்கு மனமில்லை. அதே சமயத்தில் ஊரையும் உற்றார் உறவினரையும் பார்க்கும் ஆசை ஒரு பக்கத்தில் அவனைக் கவர்ந்து இழுத்தது. அவன் பிறந்த நாட்டை நாலாபுறமும் அபாயம் சூழ்ந்திருக்கிறதென்றும் அறிந்தான். யுத்த பேரிகையின் முழக்கம் மிக மிகத் தொலைவிலிருந்து அவன் காதில் வந்து கேட்டது. இது அவன் முடிவு செய்வதற்குத் துணை செய்தது.

"திரும்பி வருகிறேன் என் கடமையை நிறைவேற்றி விட்டு வருகிறேன்." என்று அப்பெண்ணிடம் ஆயிரம் முறை உறுதிமொழி கூறி விட்டுப் புறப்பட்டான். காட்டில் பிறந்து வளர்ந்த அந்த ஊமைப் பெண் நாட்டிலிருந்து வந்திருந்த மனிதர்களுக்கு மத்தியில் வருவதற்கே விரும்பவில்லை. வாலிபன் படகில் ஏறியபோது அவள் சற்றுத் தூரத்தில் அந்தப் பழைய வளைந்த தென்னை மரத்தின் மேல் உட்கார்ந்து பார்த்துக் கொண்டிருந்தாள். அவளுடைய இரு கண்களும் அப்போது இரண்டு கண்ணீர்க் கடல்களாக வாலிபனுக்குத் தோன்றின. ஆயினும் அவன் தன் மனத்தைக் கல்லாகச் செய்து கொண்டு படகில் ஏறிச் சென்று கப்பலை அடைந்தான்.

"குந்தவை! அந்த வலைஞர் குலப் பெண் அப்படி நின்று பார்த்துக் கொண்டிருந்தாளே அந்தக் காட்சியின் நினைவு அடிக்கடி என் மனக்கண் முன் தோன்றிக் கொண்டிருக்கிறது. எவ்வளவு முயன்றாலும் மறக்க முடியவில்லை. அதைக் காட்டிலும் சோகமான இன்னும் ஒரு காட்சி. நினைத்தாலும் குலை நடுங்கும் காட்சி அடிக்கடி தோன்றிக் கொண்டிருக்கிறது. இரவிலும் பகலிலும் உறங்கும்போது விழித்திருக்கையிலும் என்னை வருத்தி வேதனைப்படுத்திக் கொண்டிருக்கிறது. அதையும் சொல்லட்டுமா?" என்று சுந்தர சோழர் தம் அருமை மகளைப் பார்த்துக் கேட்டார்.

உருக்கத்தினால் தொண்டை அடைத்துக் தழதழத்தக் குரலில், சுந்தர சோழரின் அருமைக் குமாரி "சொல்லுங்கள் அப்பா" என்றாள்.

### பதினேழாம் அத்தியாயம்
### மாண்டவர் மீள்வதுண்டோ?

இதுவரைக்கும் சுந்தர சோழர் வேறு யாரோ ஒரு மூன்றாம் மனிதனைப் பற்றிச் சொல்வது போலச் சொல்லிக் கொண்டு வந்தார். இப்போது தம்முடைய வாழ்க்கையில் நடந்த வரலாறாகவே சொல்லத் தொடங்கினார்.

"என் அருமை மகளே! சாதாரணமாக ஒரு தகப்பன் தன் மகளிடம் சொல்லக் கூடாத விஷயத்தை இன்று நான் உனக்குச் சொல்கிறேன். இதுவரை யாரிடமும் மனதைத் திறந்து சொல்லாத செய்தியை உன்னிடம் சொல்கிறேன். இந்த உலகத்திலேயே என் நண்பன் அநிருத்தன் ஒருவனுக்கு தான் இது தெரியும்.அவனுக்கும் முழுவதும் தெரியாது. இப்போது என் மனத்தில் நடக்கும் போராட்டம் அவனுக்குத் தெரியாது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## மீனவனுக்காக காத்திருந்த பூதம்

(நேற்றைய தொடர்ச்சி)



அவள் வெளியே வந்து பார்த்து உறுதி செய்ததும் ஆல்பெர்ட்டை திட்டினாள். விறகை மட்டும் வைத்து கொண்டுஎன்ன செயவது முட்டாள். நீ சென்று மீனிடம் சென்று சாப்பாட்டிற்கு தானியங்கள் வேண்டும் என சொல்லு என்றான்.

அவனும் மீனிடம் சென்று கேட் டான். அதுவும் கொடுத்தது. சில காலங்கள் கழித்து ஒருநாள் அவள் தனது உறவினர் வீட்டில் நடந்த விசேஷத்திற்கு சென்றிந்தாள். அங்கு அவர்கள் பெரிய வீடு மற்றும் நகைகளுடன் மிகவும் பிரம்மாண்டமாக தெரிந்தார்கள். ஜூலியட்டிற்கு அதை பார்த்ததும் பேராசை கொப்பளிக்க ஆல்பெர்ட்டை நச்சரித்தாள்.

அவன் நம்மிடம் என்ன இல்லை வாழ்வதற்கான அனைத்தும் உள்ளது. நானும் கடலுக்கு போகாமல் நன்றாகவே வாழ்கிறோம். இதற்கு மேல் என்ன வேண்டும் ஏன் இப்படி இருக்கிறாய் என்றான்.

ஜூலியட் அதை கேட்பதாக இல்லை. சரி மீனிடம் சென்று கேட்கிறேன் என்றாள்.

ஆல்பர்ட் வீட்டை அடைந்தான். வீட்டின் முன்னாள் ஏதோ பெரிய உருவம் இருப்பதை உணர்ந்தான். மீன் தான் பாதுகாப்பிற்கு ஏதோ ஒன்றை அனுப்பியிருக்கிறது என்று எண்ணினான். அருகில் வர வர அந்த உருவம் பயங்கரமாக இருந்தது. கை விரல்கள் நீளமாக, நகங்கள் கோரமாக, பற்கள் பெரிதாக ஒரு அரக்கியை போல தெரிந்தது. அருகில் வந்து பார்த்தாள் அது ஜூலியட். அவனுக்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. அவளிடம் நீ எப்படி இப்படி மாறினாய் என்றான்.

அந்த மீன்தான் என்னை இப்படி மாற்றி விட்டது இனி மேல் யார் வருவார்கள் என் வீட்டிற்கு என்று கலங்கினாள்.

ஆல்பர்ட் உடனடியாக கடலுக்கு விரைந்தான். எவ்வளவு கூப்பிட்டும் மீன் வரவில்லை. பதிலும் தரவில்லை. ஜூலியட்டின் பேரா சையால் அரக்கி ஆனது தான் மிச்சம்.

(முற்றும்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் நாட்டில் சட்டத்தை மதிப்பவர்களால்தான், உலகம் முழுவதும் சமாதானத்தை உருவாக்க முடியும். – சீனப் பழமொழி

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பௌத்த பிக்குகள் தான் இலங்கையை ஆள்கிறார்கள்

அரசாங்கம் என்பதும் மதபீடம் என்பதும் வேறுபட்டவை. நாட்டு மக்கள் அனைவரையும் சமமாக மதித்து சட்ட திட்டங்களை அமுல்படுத்தி நீதியான ஆட்சியை நடத்துவது அரசாங்கத்தின் பணி.

மாறாக மதபீடங்கள், மனித சமூகத்தை ஆன்மீக ரீதியில் வழிப்படுத்தி, அவர்களுக்கு ஆன்மீக சுகத்தைக் கொடுப்பது.

அதாவது மக்களை மக்களாக வாழ வைப்பது மதபீடங்களின் கடமையாகும்.

ஆனால் இலங்கையில் ஆட்சியாளர்கள் பௌத்த பீடாதிபதிகளிடம் மண்டியிட்டுக் கிடக்கின்றனர்.

ஏன்?தான் இப்படி என்று நினைக்குமளவுக்கு பௌத்த பீடங்களைத் தூக்கிப் பிடிக்கின்றனர்.

இதன் காரணமாக அரசியலில் சேர்ந்து தேர்தலில் போட்டியிட்டு பாராளுமன்றப் பதவிகளைப் பெறுவதைவிட, பௌத்த பிக்குகளாகிவிட்டால் அத்தனை அதிகாரமும் மதிப்பும் தானாக வந்து சேர்ந்துவிடும் என்ற நினைப்பு பௌத்த சிங்களவர்களிடையே ஏற்பட்டுவிட்டது.

உண்மை. இலங்கை ஒரு ஜனநாயக நாடு. இங்கு பல்லின மக்கள் வாழ்கின்றனர். இந்நாடு ஒரே சமயத்தவர்களுக்கு மட்டும் உரியதல்ல. தேர்தல் என்று வந்துவிட்டால் அனைத்து இனம், மதம் சார்ந்த மக்களும் வாக்களித்து அரசாங்கத்தை தேர்ந்தெடுக்கின்றனர்.

ஆக, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஓர் அரசாங்கம் பௌத்த மதத்தை மட்டும் தூக்கிப் பிடிப்பதன் நோக்கம் என்ன என்பது புரியவில்லை.

இலங்கை பௌத்த சிங்கள நாடு என்று அடிக்கடி சொல்வதால் ஒரு பொய் உண்மையாகிவிடமுடியாது.

தவிர, ஆதியில் இலங்கை சிவபூமி என்பதும் அந்த நாட்டை சிவபக்தனாகிய இராவணேஸ்வரன் ஆட்சி செய்தான் என்பதும் வரலாறு.

அவ்வாறாயின் இந்த நாட்டின் ஆட்சியாளர்கள் சைவ சமயத்தையே ஆட்சி மதமாக அங்கீகரிக்க வேண்டும்.

ஆனால் அதை அவர்கள் செய்யப் போவதில்லை. அவ்வாறானதொரு தேவை சைவ சமயத்துக்கும் இல்லை.

எல்லா உயிரையும் சமமாகப் போற்றுக. அன்பே சிவம் என்றுரைக்கின்ற சைவ சமயம் தன்னை ஆட்சி மதமாக ஆக்க வேண்டும் எனக் கேட்கப் போவதுமில்லை.

எனினும் இந்த நாட்டின் ஆதிச் சமயமாகிய சைவ சமயத்தைப் புறந்தள்ளி பௌத்தத்தை முதன்மைப்படுத்தி பௌத்த பீடாதிபதிகளை ஆட்சியாளர்கள் வீழ்ந்து வணங்க, அரசாங்கத்தின் ஒட்டுமொத்த அதிகாரத்தையும் பௌத்த பீடங்கள் தம்வசமாக்கிக் கொண்டன.

உண்மை. இலங்கையில் சட்டத்தின் முன் அனைவரும் சமம் என்பது பௌத்த பிக்குகளுக்குப் பொருந்தமாட்டாது.

அவர்கள் சட்டத்தை மதிப்பதில்லை. அவர்களைக் கண்டால் இலங்கைப் பொலிஸார் அட்டாங்கமாக வீழ்ந்து வணங்குகின்றனர்.

பௌத்த பிக்குகள் என்றால், அவர்களை எவரும் எதுவும் சொல்ல முடியாது என்பது தான் இந்த நாட்டின் எழுதப்படாத சட்டம்.

இதன் காரணமாகவே அவர்கள் நீதிமன்றங்களின் தீர்ப்புகளை உதாசீனம் செய்கின்றனர். அரச உத்தரவுகளைத் தூக்கி எறிகின்றனர்.

ஆம், இதன் வெளிப்பாடுதான் திருகோணமலையில் ஆளுநரின் உத்தரவையும் மீறி புத்தர் சிலையை பௌத்த பிக்குகள் நிர்மாணித்துள்ளனர்.

ஆக, இலங்கையின் ஆட்சி அதிகாரம் அனைத்தும் பௌத்த பீடங்களிடமே இருக்கிறது. இங்கு அரசாங்கம் என்பது பெயரளவுப் பங்காளர் மட்டுமே.

## விவசாயிகளுக்கு எரிபொருள் மானியம் விவசாய அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

கடந்த சிறுபோக பயிர்ச் செய்கையின் போது பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, பெரும்போகத்திற்கான எரிபொருளினை மானியமாக வழங்குவதற்கு விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

கடந்த போகத்தில் பயிர்கள் சேதமடைந்த விவசாயிகளுக்கு பெரும்போக பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக 17,000 ரூபா பெறுமதிக்கு டீசல் தொகையை பெற்றுக்கொடுப்பதற்கு விவசாய அமைச்சு தீர்மானித்துள்ளது.

உரம்கொள்வனவு செய்வதற்காக அரசாங்கத்தினால் வழங்கப்படும் 15,000 ரூபா நிவாரணத் தொகை மற்றும் ஹெக்டேர் ஒன்றுக்கு 1 இலட்சம் ரூபா இழப்பீட்டுத் தொகைக்கு மேலதிகமாக உரிய நிவாரணம் வழங்கப்படுவதாக விவசாய அமைச்சு தெரிவித்துள்ளது.

பயிர்ச்சேதங்களுக்கு உள்ளான விவசாயிகளுக்கு வழங்கப்பட வேண்டிய நிவாரணம் தொடர்பில் விவசாய மற்றும் பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தலைமையில் கலந்துரையாடல் இடம்பெற்ற நிலையில் இதன்போது குறித்த தீர்மானம் எட்டப்பட்டுள்ளது.

அதன்படி, எதிர்வரும் இரண்டு நாட்களில் ஒவ்வொரு விவசாயிக்கும் தலா 40 லீற்றர் டீசல் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

## இலங்கையில் தரமற்ற டீசல் விநியோகம் எதிர்க்கட்சித் தலைவர் சாடல்

(கொழும்பு)

தரம் குறைந்த 40,000 மெற்றிக் தொன் டீசல் சந்தைக்கு வெளியிடப்படுவதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நவம்பர் 5 ஆம் திகதி சிங்கப்பூரில் இருந்து கொழும்பு துறைமுகத்திற்கு வந்த 40,000 மெற்றிக் தொன் டீசல் மாதிரிகள் தர பரிசோதனையில் தோல்வியடைந்துள்ளதாகவும் கொலன்னாவையில் குறிப்பிட்ட டீசல் விநியோகம் செய்யப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.

டீசல் கையிருப்பின் மாதிரிகளில் இரண்டு UOC ஆய்வக சோதனை அறிக்கைகளில் அவற்றின் தரம் குறைவாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

சந்தையில் தரமற்ற டீசல் விநியோகிக்கப்பட்டுள்ளதாக வெளியான செய்தி உண்மைக்கு புறம்பானது என மின்சக்தி, வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

கையிருப்பில் தற்போது காணப்படும் டீசல் மாதிரிகள், பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படும் டீசல் தரமற்றது என உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில் அந்த டீசல் தொகை நிராகரிக்கப்பட்டு திருப்பி அனுப்பி வைக்கப்படும் எனவும் அவர் கூறியுள்ளார். (நி-5-6)

## உளுந்து, கௌப்பி; பயறு இறக்குமதிக்கு கோரிக்கை

(கொழும்பு)

உளுந்து, கௌப்பி மற்றும் பயறு போன்ற தானியங்களை இறக்குமதி செய்வது குறித்து உணவு பாதுகாப்பு குழுவிடம் முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

குறித்த தானியங்களை மீள இறக்குமதி செய்ய அமைச்சரவையிடம் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

இலங்கையில் உற்பத்தி செய்யப்படுவதால் உளுந்து, கௌப்பி மற்றும் பயறு போன்ற தானியங்களின் இறக்குமதி நிறுத்தப்பட்டதாகவும் தற்போது மக்களின் நுகர்வு அதிகரித்துள்ளதால், இறக்குமதி செய்ய யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தற்போதைய தட்டுப்பாடு காரணமாக குறித்த தானியங்களின் விலை அதிகரித்து காணப்படுவதாகவும் வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார். (நி-5-6)

## கிரிக்கெட் குழுவிற்கு எதிராக நீதிமன்றம் இடைக்கால தடை

(கொழும்பு)

விளையாட்டுத்துறை அமைச்சரினால் வெளியிடப்பட்ட இடைக்கால குழு மற்றும் வர்த்தமானி அறிவித்தலை இடைநிறுத்தி மேன்முறையீட்டு நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்துள்ளது.

வர்த்தமானி அறிவித்தலை சவாலுக்கு உட்படுத்தி இலங்கை கிரிக்கெட் சபையின் தலைவர் ஷம்மி சில்வா தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட மேன்முறையீட்டு நீதிமன்றம் அதனை 14 நாட்களுக்கு இடைநிறுத்தி இந்த உத்தரவு பிறப்பித்துள்ளது.

விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவினால் இலங்கை கிரிக்கெட் சபைக்கான இடைக்கால குழு நியமனம் தொடர்பான வர்த்தமானி நேற்று முன்தினம் வெளியிடப்பட்டது.

இலங்கை கிரிக்கெட்டுக்கு இடைக்கால குழுவை நியமிப்பதற்கான விளையாட்டுத்துறை அமைச்சரின் முடிவு குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிந்திருக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. இதனை தொடர்ந்து அமைச்சரவை கூட்டத்திலும் இது குறித்து பேசப்பட்டுள்ளது.

இதன் போது, இலங்கை கிரிக்கெட்டின் எதிர்கால செயற்பாடுகள் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சரினால் வெளியிடப்பட்ட வர்த்தமானி அறிவித்தல் தொடர்பில் ஆராய 4 பேர் கொண்ட அமைச்சரவைக்கு உப குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. (நி-5-6)

## சடுதியாக குறைவடைந்த மாம்பழங்களின் விலை

(கொழும்பு)

இலங்கையில் தற்போது மாம்பழத்தின் விலை சடுதியாக குறைவடைந்துள்ளது.

கடந்த சில நாட்களாக நாட்டில் மாம்பழம் ஒரு கிலோ மிக அதிகமான விலைக்கு விற்கப்பட்ட நிலையில் தற்போது விலை குறைவடைந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த நாட்களில் நாட்டில் மாம்பழம் ஒரு கிலோவின் விலை 1,000 ரூபா வரையில் உயர்ந்திருந்தது.

இந்தநிலையில் தற்போதைய நிலவரப்படி ஒரு கிலோ மாம்பழத்தின் விலை 400 ரூபாவாக குறைவடைந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்துள்ளனர். (நி-5-6)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** கெருடாவில், மயிலியதனை, பொக்கணை, சிதம்பரா கல்லூரி, தொண்டமானாறு ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** மகாறம்பைக்குளம் ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

**வடமாகாண மரநடுகை மாதம்**

**கார்த்திகை - 2023**

**'எவரொருவர் ஒரு மரத்தை நாட்டுகின்றாரோ, அவர் நம்பிக்கையை நாட்டுபவர் ஆவார்'**

**-லியூசி லார்கோம் (அமெரிக்கக் கவிஞர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாலைதீவில் 'இந்தியாவே வெளியேறு' முழக்கத்துடன் சீனசார்பு முகமது முய்ஜு ஜனாதிபதியாகத் தெரிவு

03

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



இது உலக நாடுகளை அமெரிக்கா ஆதரவு, சீன ஆதரவு என இரண்டாக பிரித்திருக்கிறது. இதே தான் தற்போது மாலைதீவிலும் எதிரொலித்திருக்கிறது. இத்தேர்தல் இந்திய பெருங்கடலில் இந்தியாவின் ஆதிக்கத்தை மேலும் சுருக்க வழிவகுத்துவிட்டது.

முய்ஜுவின் பெயர் எதிர்பாராத விதமாகவே இந்தத் தேர்தலில் வேட்பாளர் பட்டியலில் இடம்பெற்றது. உண்மையில், முன்னாள் ஜனாதிபதி அப்துல்லா யாமீன் தான் களத்தில் நின்றிருக்க வேண்டும். ஆனால், அப்துல்லா யாமீன் பெயர் பணமோசடி மற்றும் ஊழல் போன்ற வழக்குகளில் சிக்கியதால் அவர் தேர்தலில் போட்டியிட தகுதியற்றவர் ஆனார்.

தேர்தலில் போட்டியிட அவர் தகுதியற்றவர் என ஓகஸ்ட் மாதம் உச்சநீதிமன்றம் அறிவித்ததை அடுத்து முய்ஜுவின் பெயர் வேட்பாளர்பட்டியலில் இடம்பெற்றது. 2013-2015இற்கு இடையில் ஆட்சியில் இருந்த அப்துல் யாமீன் மாலைதீவு மற்றும் சீனாவுக்கு இடையிலான உறவை மேம்படுத்த பாடுபட்டார்,

இதேநேரத்தில் இந்தியாவுக்கும் மாலைதீவுக்கும் இடையே பொருளாதார, கலாசார, இராணுவ மற்றும் ராஜஜீய உறவுகள் 60 ஆண்டுகளாக நீடித்து வருகின்றன. இந்தியப் பெருங்கடலில் உள்ள மாலதீவின் புவியியல் சார்ந்த இடம் இந்தியாவிற்கும் சீனாவிற்கும் வியூக ரீதியாக முக்கியமானது. மாலைதீவு நீண்ட காலமாக இந்தியாவிடம் இருந்து நிதி மற்றும் ராணுவ உதவிகளைப் பெற்று வருகிறது.

கடந்த 1965ஆம் ஆண்டில் பிரிட்டனிடம் இருந்து சுதந்திரம் பெற்ற பிறகு இங்கு மன்னராட்சி முறையே நடைமுறையில் இருந்தது. பின்னர் நவம்பர் 1968 இல் குடியரசாக மாறியது. சுதந்திரம் அடைந்ததில் இருந்து, இந்தியா மாலைதீவுக்கு சமூக-பொருளாதார மேம்பாடு, நவீன மயமாக்கல் மற்றும் கடல்சார் பாதுகாப்பு போன்ற துறைகளில் உதவி அளித்து வருகிறது.

### மாலைதீவு (Maldives) பற்றி...

மாலைதீவு அல்லது மாலதீவு குடியரசு இந்தியப் பெருங்கடலில் உள்ள பல சிறிய தீவுகளாலான தீவு நாடாகும். இது இந்தியாவின் இலட்சத்தீவுகளுக்கு தெற்கேயும் இலங்கையிலிருந்து சுமார் 700 கி.மீ தென் மேற்காகவும் அமைந்துள்ளது. 90,000 ச.கி.மீ பரப்பளவுள்ள இத்தீவின் மக்கள் தொகை 3 இலட்சத்து 13 ஆயிரத்து 920 ஆகும். மொத்தம் 26 பவளத் தீவுகள் உட்பட 1,192 தீவுகள் காணப்படுவதோடு இவற்றில் சுமார் 200 இல் மட்டும் மனிதக் குடியேற்றங்கள் காணப்படுகின்றன. தீவுகளால் அமைந்த மாலைபோல் காணப்படுவதால் தமிழில் மாலை தீவுகள் என்றும் சமஸ்கிருத மொழியில் "மாலத்வீப" (தீவுகளின் மாலை) என்றும் குறிப்பிடப்படுகிறது. வேறு சிலரின் கருத்துப்படி இது "மகால்" என்ற அரபு மொழிச் சொல்லில் இருந்து மருவியதாகவும் கூறப்படுகிறது.

இயற்கை ஆர்வலர்கள், புகைப்பட ஆர்வலர்கள் மற்றும் சாகச ஆர்வலர்களுக்கு சரியான விடுமுறை இடமாக மாலைதீவு அறியப்படுகிறது. மாலைதீவு ஆசியாவிலேயே மிகச் சிறிய நாடு. தீவு நாடான மாலைதீவில் பவளப்பாறைகள், மணல் இட்டுகள், தெளிவான கடற்கரைகள் மற்றும் ரசிக்க நிறைய நீலநிறங்கள் உள்ளன. இருப்பினும், நாட்டில் பெரியமலை, ஏரி, மலை எதுவும் இல்லை. இருப்பினும் சில குன்றுகள் சுமார் 2.5 மீற்றர் உயரத்தை எட்டும்.

### மாலைதீவின் வரலாறு

மாலைதீவு குட்டி நாடாக இருந்தாலும் இந்த நாட்டுக்குத் தனிப் பாரம்பரியம் உள்ளது. ஆரம்பத்தில் கிராவரு என்ற தமிழர்கள் அங்கு ஆட்சி புரிந்ததாக ஆராய்ச்சியில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பின்னர் சோழர்கள் ஆட்சிக் காலத்தில் அவர்கள் ஆட்சியின் கீழ் நீண்ட காலமாக மாலைதீவு இருந்துள்ளது. இதன் பிறகு மாலைதீவின் வரலாற்றின்படி சிங்கள இளவரசன் கொயிமலா என்பவர் தனது மனைவியான இலங்கை அரசனின் மகளோடு கப்பலில் செல்லும் போது சதுப்பு நிலத்தில் கப்பல் சிக்கி அவர்கள் மாலைதீவில் தங்கும் படியாயிற்று. அவ்விளவரசன் இலங்கைக்கு திரும்பாமல் மாலைதீவிலிருந்து ஆட்சி செய்தான். அப்போது, அங்கு பரவலாக புத்தமதம் பின்பற்றப்பட்டுள்ளது.

தொலைகிழக்குப் பகுதிகளுக்குச் சென்ற அரேபிய வணிகர்கள், தங்கள் பயணத்தின் நடுவே மாலதீவில் தங்கிச் செல்வதை வழக்கமாக்கிக் கொண்டனர். முஸ்லிம்களுக்கு மாலைதீவு மிகவும் பிடித்து விட்டது. அங்கு, தங்களது ஆதிக்கத்தைச் செலுத்தி ஆட்சியில் அமர்ந்தனர். 1153 ஆம் ஆண்டு சுல்தான் ஆட்சி முறை வந்தது. அங்குள்ள மக்கள் அனைவரும் இஸ்லாமியர்களாக மாறத் தொடங்கினர்.

### மாலைதீவுக்கு போர்த்துக்கேயர் வருகை

16 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பிய ஆதிக்க சக்திகள் பலவும் இந்தியப் பெருங்கடலில் உள்ள வணிகத்தில் பெரும் பகுதியை தங்கள் கைவசமாக்கிக் கொண்டார்கள். பிரிட்டன், பிரான்ஸ், போர்த்துக்கல், ஹாலந்து, ஸ்பெயின் என பல நாடுகளுக்கும் இதில் பெரும் போட்டி நிலவியது.

ஏற்கெனவே மேற்கிந்தியாவில் இருந்த கோவாவில் அழுத்தமாகக் காலூன்றியிருந்த போர்த்துக்கேயர்கள், இந்தியப் பெருங்கடலில் லாபத்தை ஈட்டும் வணிக வழித்தடங்களில் தங்களுக்கு நிச்சயம் பங்கிருக்க வேண்டும் என்ற தீர்மானத்துக்கு வந்திருந்தார்கள். அவர்கள் மாலைதீவு மீது கண்வைத்தனர். "உங்களுக்காக சின்னதாக ஒரு கோட்டையும் தொழிற்சாலையும் கட்டிக் கொள்ளலாம்" என்று அனுமதி அளித்தார் அப்போதைய மாலைதீவு மன்னர். 1558 ஆம் ஆண்டில் போர்ச்சுக்கீசியர்கள் மாலைதீவு தேசத்தைக் கைப்பற்றினார்கள்.

### மாலைதீவின் விடுதலை

முகம்மது தகுருஃபானு அல் ஆஜம் (Muhammad Thakurufaanu Al Auzam) என்பவர் தனது சகோதரர்களையும் நண்பர்களையும் சேர்த்துக் கொண்டு மாலே நகரில் ஆட்சி செய்த போர்சுக்கீசியர்கள் மீது தொடர்ந்து கொரில்லாத் தாக்குதல் நடத்தினார். இதில் அத்தனை போர்ச்சுக்கீசிய ஆட்சியாளர்களும் கொலை செய்யப்பட்டனர். அவன் 1573 இல் இருந்து 1585 வரை ஆட்சி செய்தான். அதன்பின் அவன் மகன் சுல்தான்இப்ராஹிம்கலாஃபான் ஆட்சி செய்தான்.

முகம்மது தகுருஃபானு அல் ஆஜமின் போர்சுக்கீசிய ஆட்சியாளர்களுடனான வெற்றியை, தேசிய தினமாக இன்றளவும் மாலைதீவு கொண்டாடுகிறது. முகம்மது தகுருஃபானுவுக்கு ஓர் நினைவகமும் எழுப்பப்பட்டது. இவர்தான் அடுத்த சுல்தான் சாம்ராஜ்யத்தை நிறுவினார். உதீமு என்ற பெயர் கொண்ட அந்த சாம்ராஜ்யம் அடுத்த 80வருடங்கள் வரையில் மாலதீவை ஆட்சி செய்தது.

பின் மாலைதீவு , 1654 முதல் டச்சுக்காரர்கள் வசமும் 1887 இல் பிரிட்டனின் கட்டுப்பாட்டிலும் இருந்தது. 1965 ஆம் ஆண்டில் ஆங்கிலேயர்களிடமிருந்து இந்தக் குட்டி நாடு விடுதலை பெற்றது.

நவம்பர் 15, 1967 அன்று, மாலதீவு ஒரு அரசியலமைப்பு முடியாட்சியாக தொடர வேண்டுமா அல்லது குடியரசாக மாற வேண்டுமா என்பதை தீர்மானிக்க பாராளுமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. 44 பாராளுமன்ற உறுப்பினர்களில் 40 பேர்குடியரசுக்கு ஆதரவாக வாக்களித்தனர். மார்ச் 15, 1968 அன்று, இந்த கேள்விக்கு சர்வசன வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில் பங்கேற்றவர்களில் 93.34% குடியரசை நிறுவுவதற்கு ஆதரவாக வாக்களித்தனர்.

இதன் பிரகாரம் குடியரசு11 நவம்பர் 1968 அன்று அறிவிக்கப்பட்டது. இதன் மூலம் முடியாட்சி முடிவுக்கு வந்தது. அதற்கு பதிலாக இப்ராஹிம் நசீரின் தலைமையில் குடியரசு ஏற்பட்டது. மன்னருக்கு உண்மையான அதிகாரம் குறைவாக இருந்ததால் இது ஒரு ஒப்பனை மாற்றமாக பார்க்கப்பட்டது. மற்றும் அரசாங்கத்தின் கட்டமைப்புகளில் சில மாற்றங்கள் செய்யப்பட்டன.

### மாலைதீவின் முதல் குடியரசுத் தலைவராக இப்ராஹிம் நசீர்

மாலைதீவின் முதல் குடியரசுத் தலைவராக இப்ராஹிம் நசீர் என்பவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவர் 10 வருடம் பதவியில் இருந்தார். 1970களில் ஜனாதிபதி நசீரின் பிரிவுக்கும் மற்ற அரசியல் பிரமுகர்களுக்கும் இடையே ஏற்பட்ட அரசியல் உட்பூசல், 1975 இல் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதம மந்திரி அஹ்மத்ஜாக்கி கைது செய்யப்பட்டு அட்டோல் (atoll) தீவுக்கு நாடு கடத்தப்பட்டார்.

மாலைதீவின் கானில் உள்ள பிரிட்டிஷ் விமான நிலையம் மூடப்பட்டதைத் தொடர்ந்து பொருளாதாரசரிவு ஏற்பட்டது. மற்றும் ஒரு முக்கியமான ஏற்றுமதியான உலர்ந்த மீன்களுக்கான சந்தை சரிந்தது. ஜனாதிபதி நசீரின் நிர்வாகத்திற்கான ஆதரவில் தடுமாற்றம் ஏற்பட்டதால் நசீர் 1978 இல் திறைசேரியில் இருந்து மில்லியன் கணக்கான அமெரிக்க டொலர்களுடன் சிங்கப்பூருக்கு தப்பிச் சென்றார்.

இதன்பின் 1978ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் மௌமூன் அப்துல் கையூம் (Maumoon Abdul Gayoom) ஜனாதிபதியாகத் தேர்வு செய்யப்பட்டு தொடர்ந்து ஆறு தேர்தல்களில் எதிர்ப்பின்றி வெற்றி பெற்றார். அவர் 30 ஆண்டுகள் தொடர்ந்து பதவியில் இருந்தார்.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## தபால்...

ளிரவு முதல் 48 மணித்தியாலங்களுக்கு இந்த பணிப்புறக்கணிப்பு முன்னெடுக்கப்படவுள்ளதாக ஒன்றிணைந்த தபால் தொழிற்சங்கம் மேலும் தெரிவித்துள்ளது. (ம-7)

## காரைநகர்...

மேலும் இரு மூடைகளில் கஞ்சாவும் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

மூன்று மூடைகளில் இருந்தும் மொத்தமாக 137 கிலோகிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இவ்வாறு கஞ்சா கடத்திய படகில் இருந்த கிளிநொச்சி, பூநகரியைச் சேர்ந்த மூவர் கைது செய்யப்பட்டு மேலதிக சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். (ம-7)

## கஜேந்திரன்...

முறையில் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கப்படவில்லை என்றும் கடற்றொழில் அமைச்சானது வடக்கு கிழக்கு கடற்றொழிலாளர்களோடு இணைந்து செயற்படுவதில்லை எனவும் குற்றம் சாட்டியிருந்தார்.

பலத்த தொனியில் இதற்கு பதிலளித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சபையில் பொய்யான கருத்துக்களை வெளியிட வேண்டாம் எனவும், தமது குற்றச்சாட்டுக்களுக்கான ஆதாரங்களை முன்வைக்குமாறும் கஜேந்திரனுக்கு கூறியுள்ளார்.

கஜேந்திரனை குழப்பும் வகையில் டக்ளஸ் தேவானந்தா குறுக்கீடு செய்து கருத்து வெளியிட்டதை தொடர்ந்து, இருவருக்கிடையில் பலத்த தொனியில் வாக்குவாதம் இடம்பெற்றது. (ம-7)

## சீனத் தூதுக்...

வடக்குக்கு விஜயம் செய்துள்ள சீனத் தூதுக்குழுவினர் நேற்று மன்னாருக்கு விஜயம் செய்தனர்.

அங்கு தெரிவு செய்யப்பட்ட மீனவ குடும்பங்களுக்கு உணவுப் பொதிகளும் வழங்கி வைக்கப்பட்டன.

சீனாவில் உள்ள பௌத்த மக்களின் உதவியுடன் இலங்கையில் வறிய மக்களுக்கு உலருணவு பொதிகள் வழங்கும் நிகழ்வு நேற்று செவ்வாய்க்கிழமை மாலை மன்னார் வங்காலையில் இடம்பெற்றது.

மன்னார் வங்காலையில் இடம்பெற்ற குறித்த நிகழ்வில் சீனத் தூதுவர் கீ செங்ஹோங் உள்ளிட்ட குழுவினர் கலந்து கொண்டிருந்தனர்.

மன்னார் துயர் துடைப்பு மறுவாழ்வு சங்கத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற உதவித் திட்டம் வழங்கும் நிகழ்வில் சீனத் தூதுவர் கீ செங்ஹோங் கலந்து கொண்டு மன்னார் மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 450 மீனவ குடும்பங்களில் முதல் கட்டமாக 50 மீனவ குடும்பங்களுக்கு வழங்கி வைத்தார்.

மேற்படி உதவித் திட்டம் சீனாவின் பௌத்த சங்கம், இலங்கை மற்றும் சீன பௌத்த நட்புறவுச் சங்கம் ஊடாக வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

குறித்த நிகழ்வில் தெரிவு செய்யப்பட்ட மீனவ குடும்பங்கள், தள்ளாடி இராணுவ 541ஆவது படைப்பிரிவு அதிகாரி, அருட்தந்தையர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,285)

## ஆளும் கட்சி...

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள 2024ஆம் நிதி ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் தொடர்பிலும் சந்திப்பில் பேசப்பட்டது என்று அறிய முடிகின்றது. (ம-7)

## ரணில் அரசுக்குள்...

இடைக்கால கிரிக்கெட் குழுவை நீக்குமாறு அமைச்சரவைக் கூட்டத்தின் பின்னர் ஜனாதிபதி தமக்கு அறிவித்ததாக விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சகல விடயங்கள் தொடர்பிலும் இன்று பாராளுமன்றத்தில் விரிவான அறிக்கையொன்றை வெளியிடவுள்ளதாகவும் விளையாட்டுத்துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்க குறிப்பிட்டார்.

"அமைச்சரவைக்குள் என்ன நடந்தது என்பதை என்னால் கூற முடியாது, நான் கூட்டுப் பொறுப்பை பாதுகாக்க விரும்புகிறேன். ஆனால் ஜனாதிபதி பின்னர் அலுவலகத்திற்கு அழைத்து நியமிக்கப்பட்ட குழுவை நீக்குமாறு கூறினார். இல்லையேல் விளையாட்டு சட்டத்தை தன் கீழ் கொண்டு வருவேன் என்றார்.

விளையாட்டு சட்டம் அல்ல, என்னை நீக்கிவிட்டு உங்கள் விருப்பப்படி முடிவெடுங்கள் என ஜனாதிபதியிடம் கூறினேன். நியமிக்கப்பட்ட குழுவை நீக்கவே முடியாது என்று கூறினேன். இவர்கள் செய்துள்ள ஊழல். திருடர்களின் கூட்டம். ஆழம் தெரியாது." என தெரிவித்தார். (ம-7)

## பாராளுமன்றில்...

களங்களுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

ஓய்வுபெற்ற பிரதம நீதியரசர் பிரியசாத் டெப் தலைமையில் ஜனாதிபதி இந்த ஆணைக்குழுவை நியமித்ததுடன், சட்டமா அதிபர் திணைக்களம் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட திணைக்களங்களுக்கு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளார்.

அத்துடன், தேர்தல் முறை திருத்தம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இன்று பாராளுமன்றத்தில் விசேட அறிவிப்பொன்றை வெளியிட உள்ளார்.

புதியமுறைமை தொடர்பான வரைபை ஆறு மாத குறுகிய காலத்திற்குள் தயாரிக்குமாறு ஜனாதிபதி பணிப்புரை வழங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

## சம்பள...

உயர்வு வழங்குவது நிச்சயம் என கல்வி இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமார் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், சம்பள உயர்வு கோரி போராடுபவர்களின் கோரிக்கை நியாயமானது. அதில் மாற்றுக் கருத்துக்களுக்கு இடமில்லை.

இதுவெறுமனே கல்வித் துறையைச் சார்ந்தவர்களுக்கு மாத்திரம் அல்ல. சம்பள உயர்வு அனைவருக்கும் பொருத்தமானது.

அது தனியார் துறையைச் சார்ந்தவர்களாக இருக்கலாம், அரசதுறையைச் சார்ந்தவர்களாக இருக்கலாம். ஆனால் அனைவருக்குமே ஊதியஉயர்வு வழங்க வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை.

எனவே ஆசிரியர்களின் போராட்டம் நியாயமானது. இல்லையென்று சொல்லவில்லை.

அதேநேரத்தில், இந்த போராட்டம் சுயமாக ஆசிரியர்களால் மேற்கொள்ளப்பட்டதா? அல்லது அவர்களை பின்னால் இருந்து பிறிதொரு தரப்பினர் அரசியல் நோக்கத்திற்காக இயக்குகின்றார்களா? என்று நாங்கள் சிந்திக்க வேண்டியுள்ளது.

எது எவ்வாறாயினும், பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள வரவு செலவுத் திட்டத்தில் அரச ஊழியர்களுக்கான சம்பள உயர்வு வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆனால் எவ்வளவு ரூபாவினால் சம்பளம் அதிகரிக்கப்படவுள்ளது என்பது எமக்கு தெரியாது என்றார். (ம-7)


விசேட அறிவித்தல்!

தேசிய லொத்தர் சபையின் லொத்தர்களின் இறுதி இலக்கங்கள் இரண்டை அடிப்படையாகக் கொண்டு சட்டத்துக்குப் புறம்பான பந்தயம் பிடித்தல் நாடு முழுவதும் இடம்பெறுவதாக தகவல்கள் கிடைக்கின்றபடியால் நீங்கள் இந்த செயலில் ஈடுபடுதல், உற்சாகப்படுத்துதல், உதவுதல் அல்லது பங்கு பற்றுதல் சட்டத்தின்படி தண்டனைக்குரிய குற்றமாகும்.

தேசிய லொத்தர் சபையின் தகவல்.

National Lotteries Board (C-2164)

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3533 — சீட்டிழுப்பு திகதி 07.11.2023 — G 24 34 49 72 — G 52036

தன நிதானய — திகதி 2023.11.07 — சீட்டிழுப்பு இலக்கம் - 1321 — S 01 25 72 79 S — 14153

லக்கி 7 — திகதி 07.11.2023 — சீட்டிழுப்பு இலக்கம் 0117 — L7 இலக்கம் 2 8 — மேடம் 0 5 6 7 4 0

HANDAHANA — சீட்டிழுப்பு திகதி 2023.11.07 — சீட்டிழுப்பு இலக்கம் 0600 — சிம்மம் 40 46 52 60 சிம்மம் — 49994 — 28

மெகா பவர் — திகதி 07/11/2023 — சீட்டிழுப்பு இலக்கம் 1639 — H 03 11 21 24 67 — 25295

மஹஜன சம்பத — திகதி 2023/11/07 — சீட்டிழுப்பு இலக்கம் 5291 — W 8 4 0 7 2 5

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2265 — வர்ணம் இள நீலம் — சீட்டிழுப்பு திகதி 2023.11.07 — தினம் செவ்வாய்க்கிழமை — 05 34 52 70 V — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 54,971,980/-

சனிதா — திகதி 2023.11.07 — வெற்றி வாரம் 4426 — வர்ணம் பச்சை — 20 34 62 65 U — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 63,125,316.00

சசிரி — 399 — 2023.11.07 — 04 13 47 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,300,240/-

ராசி — சீட்டிழுப்பு வாரம் 3977 — வர்ணம் சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 2023.11.07 — தினம் செவ்வாய்க்கிழமை — 19 20 48 51 — கும்பம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 4,169,320/-

ஜயோதா — 1441 — 2023.11.07 சவெ்வாய் — T 05 05 18 40 48 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 462,126,694.20

அத கோடிபதி — செவ்வாய்க்கிழமை — வெற்றி வாரம் 2091 — சீட்டிழுப்பு திகதி 2023.11.07 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 67,456,048/- — 27 64 71 74 Q


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (17671)

076 825 7716 (ஆகாஸ்)



**1 நாள் கோழிக்குஞ்சுகள் விற்பனைக்குண்டு**

பிறிமா பாம் ஒருநாள் சிவப்பு, வெள்ளை முட்டைக் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. ஒவ்வொரு வியாழக்கிழமையும் பெற்றுக் கொள்ள முடியும். தேவை உள்ளவர்கள் முற்பதிவு செய்யவும். பண்ணையாளர்களுக்கு விநியோகம் இலவசம்.

**நியூ சிற்றி பாம்**
**சின்னக்கடை மாக்கற் முன்பாக**
**குருநகர், யாழ்ப்பாணம்.** (17694)



**பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை**

யாழ். நகரில் இயங்கும் நிறுவனம் ஒன்றுக்கு பகல்நேர பாதுகாப்பு உத்தியோகத்தர் தேவை.
வயது : 40 - 65
(யாழ். நகருக்கு அண்மையில் இருப்பவர்களுக்கு முன்னுரிமை)
தொடர்புகளுக்கு
076 097 3121



**VILLAGE HOTEL**
**பஸ் சேவை**
**JAFFNA EXPRESS**
AIRPORT PICK UP DROP SERVICE
வடமராட்சி - யாழ்ப்பாணம் - கொழும்பு
வடமராட்சி - கொடிகாமம் - கொழும்பு
2800/=



(17484)
T.P:077 544 8503



**தேவை**

பேக்கரி வேலை
தெரிந்தவர்களும்
உதவியாட்களும் தேவை. (17700)

077 125 2257
021 223 0849


## மின்சாரம் தாக்கி இளம் தாய் பலி

புத்தளம் மதுரங்குளி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ரெட்பானா - புழுதிவயல் பகுதியில் மின்சாரம் தாக்கி இளம் தாய் ஒர் உயிரிழந்துள்ளார்.

நேற்று நண்பகல் 11.30 மணிக்கும் 12 மணிக்கும் இடையில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

பாலாவி - புழுதிவயல், ரெட்பானா பகுதியைச் சேர்ந்த குப்பை மரிக்கார் பாத்திமா சாபிகீன் (வயது 38) எனும் ஒரு பிள்ளையின் தாயே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வீட்டில் மின்சார தேவைக்காக மின் வயரை எடுத்து கையாளுகையிலேயே இவ்வாறு மின்சாரத் தாக்குதலுக்கு உள்ளாகியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறு மின்சாரம் தாக்குதலுக்கு உள்ளான குறித்த இளம் பெண்ணை, அங்கிருந்தவர்கள் உடனடியாக புத்தளம் தள வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதித்த போதிலும், அவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சம்பவம் தொடர்பில் புத்தளம் பகுதிக்குப் பொறுப்பான திடீர் மரண விசாரணை அதிகாரி பதுர்தீன் முஹம்மது ஹிஸாம், மரண விசாரணையை நடத்தினார்.

அத்துடன், நேற்று மாலை உயிரிழந்த இளம் பெண்ணின் ஜனாஸா மீதான பிரேத பரிசோதனையும் முன்னெடுக்கப்பட்டது.

(ம-7)


**VISA விண்ணப்பங்கள்**

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்
✓ONLINE APPLICATIONS
✓VISA APPOINTMENTS
✓PASSPORT APPLICATION
✓POLICE CLEARANCE
என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும். (C-7582)




Srilankan Visa Extension வெளிநாட்டு Passport களுக்கு
இலங்கை விசா நீட்டித்து தரப்படும்
COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS
0777-068-777



**அலுவலக வேலை - பயிற்சி**

2 மாத கால பயிற்சியுடன் உடனடி வேலைவாய்ப்பு
*நீங்கள் A/L எடுத்துவிட்டு மேற்படிப்புக்காக / வேலைக்காக காத்திருப்பவரா?
*இதோ! 2 மாத கால அலுவலக வேலையுடனான பயிற்சி நெறி
*பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்



(C-7582)
சம்பளம் - 60,000/- (2 மாதம்)
V2 TRAVELS - 0777-068-777



**தரமான காணி விற்பனைக்கு உண்டு**

GOLDEN Real Estate

**யாழ்ப்பாணம் கைதடிச் சந்திக்கு அருகாமையில் A9 வீதி முகப்புடன் 51 பரப்புக்காணி விற்பனைக்குண்டு.**

- 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- நிலப்பரப்பு, நன்னீரூற்று
- வடமாகாண சபை, சித்த மருத்துவமனை ஆகியவற்றிற்கு எதிரே பிரதான வீதியுடனான காணி
- 18 அடி பாதை
- யாழ். பஸ் நிலையத்திலிருந்து 6 km தூரம் மிகவும் நல்லசூழல்.
- குடியிருப்புகள் சூழவுள்ள காணிவீடு கட்டுவதற்கும், களஞ்சியசாலைகள் அமைப்பதற்கும் உகந்த இடம்
- பரம்பரைக்காணி, பல வருடகால தோம்பு, தூய உறுதி
- தரகர் தேவையில்லை.
- பார்வையிடும் நேரம் காலை 06.00 - மாலை 06.00 மணிவரை
- 1 பரப்பின் விலை 24 லட்சம்

**Golden Real Estate (PVT) Ltd**
Director & Owner : **T.Kalaithasan**
076 755 8606, 077 623 4204 (17694)



**TOURISM VACANCIES**

TOUR OPERATOR SINCE 1998 IS TO OPEN BRANCH IN JAFFNA REQUIRES


❖TOUR OPERATIONS ASSISTANT WITH
◆ ALL THREE LANGUAGES
◆ COMPUTER KNOWLEDGE
◆ SOCIAL MEDIA

ADVANTAGE FOR TOURISM DEGREE HOLDERS AND EXPERIENCE (C-7579)

Whatsapp Your CV To
+94777360353


# மரண அறிவித்தல்

தோற்றம்
1921 . 08 . 02



மறைவு
2023 . 11 . 06

## திருமதி சரஸ்வதி அருளாநந்தம்(இஞ்சருங்கோ)

வயது : 102

யாழ். நல்லூரைப் பிறப்பிடமாகவும், கலட்டி மற்றும் கனடா Brampton ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட சரஸ்வதி அருளாநந்தம் அவர்கள் 06.11.2023 அன்று கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான திரு,திருமதி சின்னத்தம்பி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற அருளாநந்தம் அவர்களின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற மகேந்திரன்(சாம், கனடா), குலேந்திரன்(பிரான்ஸ்), ஞானேந்திரன்(ஞானி, கனடா), கருணேந்திரன் (கருணை, கனடா), ராஜேந்தின்(ராசு, கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற யோகம்மா(நல்லூர்) அவர்களின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான கனகசாபதி, சிவகுருநாதன் ஆகியோரின் அன்பு மைத்துனியும் லியோனி(கனடா), ரேவதி(பிரான்ஸ்), சிவசோதி(கனடா), அஜந்தா(கனடா), பிரேமிளா(கனடா) ஆகியோரின் பாசமிகு மாமியும் பாலநேசன், துவாரகா, சரசின், அனுசியா, துவிந்தா, றுக்சன், கரிஷன், றிதுசன், மரிக்கா, சொனித், ருஷான், றசித்தா ஆகியோரின் அப்பம்மாவும் Yashmini, Yaamilan, Adhithyaa, Arun, Niroshan, Ryder, Kai, Jacob, Ashton ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 9.11.2023 அன்று வியாழக்கிழமை பகல் 11 மணியளவில் கனடாவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தொடர்புகளுக்கு
+14169044230 (அஜந்தா-கருணேந்திரன்)
கனடா, நல்லூர் (17698)

தகவல் :
குடும்பத்தினர்

# 8 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **முத்தர் திருநாவுக்கரசு**

பிறப்பு 11.04.1941 | இறப்பு 08.11.2015



வருடங்கள் பல உருண்டு சென்றாலும்
அழியாது உங்கள் திருவுருவம்
கடமைகள் அனைத்தும் நிறைவுற்றது என்றா
காலனவன் உங்களை கவர்ந்திழுத்து
எம்மை மீளாத் துயிலில் ஆழ்த்திவிட்டான்
விதியவன் வினைப் பயனால்
மீளாத் துயில் கொண்டீரே
ஆறாத் துயரில் ஆழ்த்திச் சென்றீரே!

கராஜ் லேன்,
சண்டிலிப்பாய். (17697)

மனைவி,
பிள்ளைகள்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல.[illegible], பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 08.11.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org